

காரைநகர்

வலந்தலையைச் சேர்ந்த

அமரர் உயர்திரு

# கார்த்திகேசு சோமசுந்தரம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவுமலர்

10.12.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



காரைநகர் வலந்தலை சம்பந்தர்
கண்டியைச் சேர்ந்த
அமரர்

# கார்த்திகேசு சோமசுந்தரம்

அவர்களின்
சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

10-12-2011


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்புக்கு அருமருந்தாய்
பாசத்தின் அணிகலமாய்
இன்சொல்லுக்கு இலக்கணமாய்
உண்மையின் உயர்மகனாய்
எம்மையெல்லாம் வாழ வைத்து
இறையடி சேர்ந்த
எம் அன்புத் தெய்வத்தின்
திருப்பாதக் கமலத்துக்கு
இம்மலரை
காணிக்கை ஆக்குகிறோம்

**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குவலயத்தில்
10.07.1934

சிவமயத்தில்
10.11.2011

# அமரர் கார்த்திகேசு சோமசுந்தரம் அவர்கள்

## திதிவெண்பா

ஆண்டு கரவில் ஐப்பசி எண்மூன்றில்
பூண்ட புனிதப் பூரணையே - ஈண்டிருந்த
பண்பாளன் சோம சுந்தரப் பதிவாளன்
திண்புரனைச் சேர்ந்த திதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# கடவுள் வாழ்த்து

# பொன்மலிந்த திருமுறைப் பாசுரங்கள்

**திருஞானசம்பந்த சுவாமிகள்** **முதலாந் திருமுறை**

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

பொன்னியல் கொன்றை பொறிகிளர் நாகம் புரிசடைத்
துன்னிய சோதி யாகிய ஈசன் தொன்மறை
பன்னிய பாடல் ஆடவன் மேய பரங்குன்றை
உன்னிய சிந்தை உடையவர்க் கில்லை உறுநோயோ.

**திருஞானசம்பந்த சுவாமிகள்** **இரண்டாந் திருமுறை**

## தேவாரம்

பொன்னொப் பவனும் புயலொப் பவனும்
தன்னொப் பறியாத் தழலாய் நிமிர்ந்தான்
கொன்னற் படையான் குடவா யில்தனில்
மன்னும் பெருங்கோ யில்மகிழ்ந் தவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய் பிஞ்ஞகா பிறப்பிலீ
கொன்றையம் முடியினாய் கூடல்ஆல வாயிலாய்
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

திருநாவுக்கரசு சுவாமிகள் நான்காம் திருமுறை

பொன்னள வார்சடைக் கொன்றையி னாய்புகலூர் அரசே
மன்னுள தேவர்கள் தேடு மருந்தே வலஞ்சுழியாய்
என்னள வேயுனக் காட்பட் டிடைக்கலத் தேகிடப்பார்
உன்னள வேயெனக் கொன்றுமி ரங்காத உத்தமனே.

திருநாவுக்கரசு சுவாமிகள் ஐந்தாந் திருமுறை

## தேவாரம்

பொன்னொப் பானைப்பொன் னிற்சுடர் போல்வதோர்
மின்னொப் பானைவிண் ணோரும் அறிகிலார்
அன்னொப் பானை அரத்துறை மேவிய
தன்னொப் பானைக் கண் டீர்நாத் தொழுவதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருநாவுக்கரசு சுவாமிகள் ஆறாந் திருமுறை

## தேவாரம்

பொன்மணியம் பூங்கொன்றை மாலை யானைப்
புண்ணியனை வெண்ணீறு பூசி னானைச்
சின்மணிய மூவிலைய சூலத் தானைத்
தென்சிராப் பள்ளிச் சிவலோ கனை
மன்மணியை பொன்சுடலை யூரைப் பேணி
வல்லெரு தொன்றேறும் மறைவல் லானைக்
கண்மணிகள் வெண்திரைசூழ் அந்தண் நாகைக்
காரோணத் தெஞ்ஞான்றுங் காணலாமே.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஏழாந்திருமுறை

## தேவாரம்

பொன்னானை மயிலூர்தி முருகவேள் தாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை அமரர்கள்தம் பெருமானைக் கருமானின்
உரியானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை எறிகெடில வடவீரட் டானத்
துறைவானை இறைபோது மிகழ்வன்போ லியானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பொன்னிய லுந்திரு மேனிவெண் ணீறு
பொலிந்திடு மாகாதே
பூமழை மாதவர் கைகள் குவிந்து
பொலிந்திடு மாகாதே
மின்னியல் நுண்ணிடை யார்கள் கருத்து
வெளிப்படு மாகாதே
வீணை முரன்றெழும் ஓசையில் இன்பம்
மிகத்திடு மாகாதே.

தன்னடி யார்அடி என்தலை மீது
தழைப்பண ஆகாதே
தானடி யோம்உட னேஉய்ய வந்து
தலைப்படு மாகாதே
இன்னியம் எங்கும் நிறைந்தினி தாக
இயம்பிடு மாகாதே
என்னைமுன் ஆளுடை ஈசன்என் அத்தன்
எழுந்தரு ளப்பெறிலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கோவையார்

பொன்னார் சடையோன் புலியூர் பகழா ரெனப் புரிநோ
யென்னா லறிவில்லை யானொன் றுரைக்கிலன் வந்தயலார்
சொன்னா ரெனுமித் துரிசுதுன் னாமைத் துணைமனனே
யென்னாழ் துயர்வல்லை யேற்சொல்லு நீர்மை யினியவர்க்கே.

கருவூர்த்தேவர் ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

செம்பொனே பவளக் குன்றமே நின்ற
திசைமுகன் மால்முதற் கூட்டத்
தன்பரா னவர்கள் பருகும்ஆ ரமுதே
யத்தனே பித்தனே னுடைய
சம்புவே யணுவே தாணுவே சிவனே
சங்கரா சாட்டியக் கடியார்க்
கின்பனே யெங்கும் ஒழிவற நிறைந்தே
ழிருக்கையி லிருந்தவா றியம்பே.

சேந்தனார் ஒன்பதாம் திருமுறை

## திருபல்லாண்டு

மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகல
பொன்னின் செய்மண் டபத்துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்கநெறி தந்தபித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர் பத்தாந் திருமுறை

## திருமந்திரம்

பொன்னைக் கடந்திலங் கும்புலித் தோலினன்
மின்னிக் கிடந்து மிளிரும் இளம்பிறை
துன்னிக் கிடந்த சுடுபொடி யாடிக்குப்
பின்னிக் கிடந்ததென் பேரன்பு தானே.

சேரமான் பெருமான் நாயனார் பதினோராந் திருமுறை

## பிரபந்தங்கள்

பொன்னம் பலத்துறை புண்ணியன்
என்பர் புயல்மறந்த
கன்னன்மை தீரப் புனிற்றுக்
கலிக்காமற் கன்றுபுன்கூர்
மன்னு மழைபொழிந் தீரறு
வேலிகொண் டாங்கவற்கே
பின்னும் பிழைதவிர்ந் தீரறு
வேலிகொள் பிஞ்ஞகனே.

சேக்கிழார் பன்னிரண்டாந் திருமுறை

பொன்ம லைக்கொடி யுடனமர் வெள்ளியம் பொருப்பில்
தன்மை யாம்படி சத்தியுஞ் சிவமுமாஞ் சரிதைப்
பன்மை யோனிகள் யாவையும் பயில்வன பணிந்தே
மன்னு மாதவர் தம்பிரான் கோயில்முன் வந்தார்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கார்த்திகேசு சோமசுந்தரம் அவர்களின் வாழ்வில்

| | | |
|---|---|---|
| பிறப்பு | :- | காரைநகர் வலந்தலை சம்பந்தர்கண்டி |
| | | 01.07.1934 |
| பரம்பரை | :- | தில்லை உடையார் பரம்பரை |
| தந்தை | :- | சண்முகம் கார்த்திகேசு |
| தாய் | :- | கார்த்திகேசு தெய்வானைப்பிள்ளை |
| ஆரம்பக்கல்வி | :- | வலந்தலை தெற்கு அ.த.க. பாடசாலை (அப்புத்துரை பள்ளிக்கூடம்) |
| இடைநிலைக்கல்வி | :- | காரைநகர் இந்துக்கல்லூரி |
| தொழில் | :- | விவாக இறப்பு பிறப்பு பதிவாளர் |
| மனைவி | :- | சிவபாக்கியம் |
| பிள்ளைகள் | :- | புஸ்பநாயகம், செந்தூரன் |
| மருமகள் | :- | கிருபாலினி |

## சமூகத்தொண்டும் பொதுச் சேவையும்

1) மருதடி விநாயகர் ஆலய பொறுப்புரிமையாளர் சபைத் தலைவர்
2) காரைநகர் சிவன்கோயில் திருப்பணிச்சபை
3) காரைநகர் சிவன்கோயில் நித்தியபூசை உதவிச்சபை
4) மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை
5) காரைநகர் வடக்கு பிரதேச சபைத்தலைவர்
6) காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கார்த்திகேசு சோமசுந்தரம் அவர்களின் வாழ்க்கைச் சரிதம்

இந்துமா கடலின் முத்தெனத்திகழ்வதும் திருமூல நாயனாரால் சிவபூமி எனப் போற்றப்பட்டதுமான இலங்கைத் திருநாட்டின் சிரசென விளங்கும் யாழ்ப்பாணத்தின் மேற்குப்பாகத்தில் அமைந்துள்ள சப்ததீவுகளில் காரைதீவு எனப்படும் எனப்படும் காரைநகரும் ஒன்றாகும்.

நாற்புறமும் கடல்வளமும் நடுவே செந்நெற் கழனிகளும், சாலைகளும் சோலைகளும் நிறைந்து விளங்கும் காரைநகர் "ஈழத்துச் சிதம்பரம்" என்னும் திருத்தலத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் புண்ணிய பூமியாகும்.

சைவச்சான்றோரும், அறிஞர் பெருமக்களும், வணிகர்களும், வளம்மிகு விவசாயிகளும் வாழும் இப்பதியின் கண் மருதடி வீரகத்தி விநாயகர் வீற்றிருந்து அருள் பாலிக்கும் 'சம்பந்தர் கண்டி' என்னும் இடத்தில் மரபால் உயர்ந்த தில்லை உடையார் பரம்பரையில் உதித்த வினாசித்தம்பி சண்முகம் சிவகாமி தம்பதியினரின் மூன்றாவது புதல்வராக ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றாறில் அவதரித்தவர் அமரர் கார்த்திகேசு அவர்கள். இவர், தம் சகோதரர்களான தில்லையம்பலம், கனகசபை, கணபதிப்பிள்ளை ஆகியோரைப் போன்று மலேசியாவில் தொழில் புரிந்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகேசு அவர்கள் தமது முதிய பெற்றோரை நினைத்து இளம் வயதில் வேலையில் இருந்து ஓய்வு பெற்று *(pre mature Retirement)* நாடு திரும்ப வேண்டியிருந்தது.

திருமண வயதையடைந்த இவர் தனது சொந்த மைத்துனியான பார்வதியைத் திருமணம் செய்து இல்லற வாழ்வின் பயனாக சிவஞானசுந்தரம் என்ற மகனைப் பெற்றெடுத்தார். மகப் பேற்று காலத்தில் நோய்வாய்ப்பட்ட பார்வதி இறையடி சேர்ந்தார்.

தாயில்லாப்பிள்ளையையும் நோய்வாய்ப்பட்ட முதிய பெற்றோரை யும் பராமரிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கிய கார்த்திகேசு 1929இல் இரண்டாவது தாரமாக களபூமியைச் சேர்ந்த கந்தப்பு செல்லம்மா தம்பதிகளின் மகள் தெய்வானைப் பிள்ளையை மணம் முடித்தார். இவர்களுக்கு நீண்டகாலமாக பிள்ளைப் பேறின்மையால் நல்லூர்க் கந்தனை நினைத்து நோன்பிருந்து முருகன் அருளால் சோமசுந்தரம், சொக்கலிங்கம், தேவராசா, குமாரவேலு ஆகிய நான்கு ஆண் முத்துக்களைப் பெற்றெடுத்தனர். இவர்களில் சிரேஷ்ட புதல்வரே அமரர் **சோமசுந்தரம்** ஆவார். *1934.07.01*இல் பிறந்த அமரர் சோமசுந்தரம் தனது ஆரம்பக்கல்வியை அக்காலத்தில் அப்புத்துரை பள்ளிக்கூடம் என்று புகழ்பெற்ற வலந்தலை தெற்கு அ.த.க பாடசாலையில் கற்று உயர்கல்வியை (*Pre SSC* வரை) காரைநகர் இந்துக்கல்லூரியில் கற்றார். பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தபின் தலைநகர் கொழும்பு சென்று தனியார் நிறுவனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(Company)* ஒன்றில் தொழில் புரிந்தார். பின்னர் ஊருக்கு வந்து கார் வான் உரிமையாளராக கொண்டு தொழில் செய்து வந்தார். 1965 – 72 காலப்பகுதியில் இடைப்பிட்டியைச் சேர்ந்த சின்னர் செல்லத்துரை அவர்களுடன் சேர்ந்து ஒப்பந்தகாரராகப் பணியாற்றி வந்தார்.

1968இல் நடைபெற்ற கிராம சபைத் தேர்தலில் போட்டியிட்டு காரைநகர் வடக்கு கிராமசபைத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு மக்களுக்குச்சிறந்த சேவையாற்றி வந்தார்.

1970 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி பாலாவோடையைச் சேர்ந்த தாமோதரம்பிள்ளை நாச்சிப்பிள்ளை தம்பதிகளின் கனிஷ்ட புத்திரி சிவபாக்கியத்தைத் திருமணம் புரிந்து இல்லற வாழ்வில் ஈடுபட்டு வந்தார்.

1970இல் நடைபெற்ற இலங்கைப் பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்ட அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி வேட்பாளர் ஆ.தியாகராசாவுக்கு ஆதரவாக வேலை செய்து அவரைத் தேர்தலில் வெற்றிபெறச் செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972 காலப்பகுதியில் முத்தையன் கட்டு பகுதியில் விவசாய நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபட்டு வந்தார். இல்லற வாழ்வில் ஈடுபட்டும் சமூகப்பணிகளில் ஆர்வம் காட்டி வந்த அமரர் சோமசுந்தரம் அவர்கள் புத்திரபாக்கியம் வேண்டி கதிர்காமக் கந்தனை வழிபட்டு வரவே முருகன் அருளால் புஸ்பநாயகம், செந்தூரன், ஆகிய இரண்டு ஆண்பிள்ளைச் செல்வங்களைப் பெற்றெடுத்தார்.

1975.06.17இல் பிறந்த இவரது மூத்த புதல்வன் புஸ்பநாயகம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கல்வி கற்று ஆசிரிய வளவாளராக ஆக தொழில் புரிந்து வருகிறார். இவருக்கு காரைநகர் மாப்பாணவூரியைச் சேர்ந்த காரைநகர் சிவன்கோவில் தர்மகர்த்தா பரம்பரையினரான திரு. சண்முகநாதன் மங்கலாம்பாள் அவர்களின் புத்திரி கிருபாலினியை 2009.12.06 இல் திருமணம் செய்து வைத்தார். 1977.07.18இல் பிறந்த இவரது கனிஷ்ட புத்திரன் செந்தூரன் காரைநகர் இக்கல்லூரியில் கல்வி கற்று இத்தாலியில் தொழில் புரிந்து வருகிறார்.

1977இல் நடைபெற்ற பாராளுமன்ற பொதுத்தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் போட்டியிட்ட திருநாவுக்கரசு அவர்களின் தேர்தல் வெற்றிக்காகப் பாடுபட்டு உழைத்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980ஆம் ஆண்டு பதில் பதிவாளராகவும் 01.04.1982 முதல் இறப்பு பிறப்பு விவாகப் பதிவாளராகவும் பதவி ஏற்று மிகவும் சிறப்பாகவும் மக்களுக்கு விசுவாசமாகவும் செயற்பட்டு வந்தார் கடந்த 29 ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான தம்பதியினரின் விவாகப் பதிவுகளை மேற்கொண்டு மணமக்களை வாழ்த்தி மகிழ்ச்சியடைந்தார்.

அமரர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் பின்வரும் சமூக நிறுவனங்களின் ஊடாக கிராம மக்களுக்கு அளப்பரிய சேவைகள் செய்து வந்துள்ளார் அவர் தொண்டாற்றிய சமூக நிறுவனங்களும் வகித்த பதவிகளும்

01. விவாக இறப்பு பிறப்பு பதிவாளர்

02. காரைநகர் வடக்கு கிராமசபைத்தலைவர்

03. காரைநகர் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத் தலைவர்

04. மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பொறுப்புரிமையாளர் சபைத் தலைவர்

05. காரைநகர் சிவன்கோயில் திருப்பணிச்சபை உறுப்பினர்

06. காரைநகர் சிவன்கோயில் நித்தியபூசை உதவிச்சபை

07. மாணிக்கவாசகர் மடாலய அன்னதானசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1991இடப்பெயர்வின் போது காரைநகர் மக்கள் இடம்பெயர்ந்து அயற் பிரதேசங்களில் வாழ்ந்து வந்த போது மக்கள் நலன் வேண்டி மூளாய் பிள்ளையார் ஆலயத்தில் 1992இல் நடைபெற்ற யாகத்தை ஊர்மக்களுடன் சேர்ந்து சிறப்பாக நடத்தி முடித்தார்.

1993இல் தனது பெறாமகள் யோகேஸ்வரியின் திருமணத்தையும் 1998இல் பெறாமகள் கமலாதேவியின் திருமணத்தையும் சிறப்பாக நடத்தி மகிழ்ச்சி கண்டார்.

2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 06 ஆம் திகதி தனது மூத்த மகன் புஸ்பநாயகத்தின் திருமணத்தை நோய்வாய்ப்பட்டிருந்த போதிலும் சிறப்பாக நடத்தி மகிழ்ச்சி கண்டார்.

தனது முதுமைக் காலத்திலும் இறைபணியே தன்பணியெனக் கொண்டு மக்கள் சேவையே மகேசன் சேவையாக எண்ணி பல்வேறு சமூக அறப்பணிகளில் ஈடுபட்டு எல்லோரும் போற்ற வாழ்ந்த அமரர் சோமசுந்தரம் அவர்கள் 2011.11.10 வியாழக்கிழமை மருதடி வீரகத்தி விநாயகர் பாதம் சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்திபெற ஆண்டிகேணி ஐயனாரைப் பிரார்த்தித்து நிற்கிறோம்.

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்புடைய பெரியார்

ஈழத்துச் சிதம்பர ஆலயம் சிறப்பால் ஏற்றமுற விளங்கும் காரைநகரில் வலந்தலை என்னும் குறிச்சியில் பிறந்த அமரர் கார்த்திகேசு சோமசுந்தரம் கல்வி கேள்விகளில் வல்லவராகி பல பொதுத் துறைகளில் மேன்மை பெற்று எல்லோருடைய மனதிலும் சிறப்புற விளங்கியவர். இவரின் மென்மையான பேச்சு எல்லோரையும் கவர்ந்தது. என்னுடன் சமய சம்பந்தமான விடயங்கள், ஆலய விடயங்கள் பற்றிமனம் விட்டு பேசியவை இன்னும் பசுமரத்தாணிபோல் எனது மனதில் பதிந்துள்து. அத்தோடு எனது பாட்டனார் சுந்தரம் ஐயா பற்றியும் அவரது செயற்பாடுள் பற்றியும் எனக்கு நன்கு கூறுவார். நான் அவருடன் சிறுவயது முதல் பழகியுள்ளேன் ஏழு ஆண்டுகளிற்கு மேல் நெருங்கிப் பழகியுள்ளேன்.

தலைமைத்துவம் என்பது பொறுப்பு வாய்ந்த பதவியாகும். அதினின்றும் செயற்படுத்துபவரிடம் பொறுமை, சகிப்புத்தன்மை, ஏனையோரிடம் இருந்து வரும் கருத்துக்களை உள்வாங்கும் மனப்பக்குவம் என்பன முக்கியமாகும். இவ்வாறான சகல பண்புகளையும் தன்னகத்தே கொண்டு எமது ஆலயத்தை செவ்வனே வழிநடத்திய பெருமைக்குரியவர். இவரது காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராண படிப்பு லட்சார்ச்சனை பன்னிரு திருமுறை ஓதல் சமயப் பிரசாரங்கள் ஆகியவற்றை ஆலயத்தில் நடைமுறைப்படுத்தி அவற்றை செவ்வனே தொடர்ந்து நடைபெற ஆவன செய்துள்ளனர்.

அன்னாரின் மறைவு எம் அனைவருக்கும் ஓர் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்ம சாந்திக்கும் அவரது குடும்பத்தினரின் மனச்சாந்திக்கும் எல்லாம்வல்ல மருதடி வீரகத்தி விநாயகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!**

**சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்**
**பிரதமகுரு**
**சிவஸ்ரீ பா. ஸ்கந்தரூபக்குருக்கள்**
**உதவிக்குருக்கள்**
மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம்,
காரைநகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிவாளர் பதவியை பெருமையுடன் வகித்தவர் கார்த்திகேசு சோமசுந்தரம்

திருவாளர் சோமசுந்தரம் அமரரான செய்தி பத்திரிகை மூலம் அறிந்தேன். எமது ஆழ்ந்த அனுதாபங்கள். சோமசுந்தரம் அவர்களை நீண்டகாலமாக நான் அறிவேன். மிகவும் ஆசார சீலராகவும், பயபக்தியுடன் தமிழ்க்கலாசார உடையுடனும், விபூதியும் பொட்டுமாக அன்னார் எம் அலுவலகம் வருவார் அந்த தோற்றம் இன்றும்எம் கண்முன் நிற்கின்றது. அதன் காரணமாக அவர் மீது எமக்கு மிகுந்த மரியாதையும் அபிமானமும் ஏற்பட்டது. காரைநகர் மண்ணிற்குரிய பெருமைகள் அவையாகும்.

தனது கடமையை மக்கள் சேவையாய் மிகவும் பக்குவமாக ஆற்றியவர் அவர். காரைநகர் மக்களின் பிறப்பு இறப்பு விவாகம் ஆகியவற்றை முறைப்படி பதிவு செயது மக்களின் தேவைகளை சீராக நிறைவேற்றுவதில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டவர். கூட்டுறவுச்சங்கம் கிராமசபை போன்றவற்றில் பதவிகள் பல வகித்த போதும், தமது எந்தக் கடமையிலும் குறை வைக்காமல் நிறைவு செய்தவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய காலத்தில் எமது அலுவலகத்துக்கு வரும் அவர் எனது அலுவலக அறைக்குள் வரும் போது செருப்பை கழற்றி விட்டுத்தான் வருவார். அதற்கு அவர் சொன்ன காரணம் ஒவ்வொரு அலுவலகத்தினதும் சாமியறை அவ்வலுவலக பெரியவரின் அறை என்பதாகும். அன்னாரைப் பற்றியும் அவரின் பண்புகள் பற்றியும் இதற்குமேல் சொல்லத்தேவையில்லை.

அன்னாரின் தொடர்புகள் சில வருடங்களாக இல்லாதபோதும் அவரைப் போன்ற பெரியவர்களின் தொடர்பு நினைவில் என்றும் நிற்கும்.

அன்னாரின் ஆன்மா ஈழத்துச் சிதம்பரத்தானின் பாத கமலங்களில் சாந்தியடைய பிரார்த்திக்கிறேன்.

அன்புடன்

**ந.சதாசிவஐயர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்றும் எம் நினைவில் வாழும் உத்தமர்

திரு.சோமசுந்தரம் ஐயா அவர்களின் திடீர் மறைவினால் அதிர்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். அவருடன் எனக்கான நெருங்கிய தொடர்பு காரைநகர் மக்கள் யாவரும் இடம்பெயர்ந்த வருடமான 1991இல் இருந்து எனது கந்தோருக்கு பக்கத்து வீட்டில் இருந்த நாள் தொடக்கமே ஏற்பட்டது. அதற்கு முன்பு காரைநகரில் எனது தந்தையாருடன் நெருங்கிய நண்பராக இருந்த காலத்தில் எமது வீட்டிற்கு வரும் போதெல்லாம் நன்கு பழகியவர்.

நிமிர்ந்த நடை, நேர் கொண்ட பார்வை, நெடிய வைரத் தோற்றம், நெற்றியில் திருநீற்றுக்கு நடுவே இலங்கும் சந்தனமுங் குங்குமமும் கலந்த திலகம், நிலவொளி போன்று புன்னகை தவழும் வட்டமுகம், தமிழ் பண்பாடு காட்டும் வேட்டி, வெள்ளைச் சட்டையுடன் தோளில் வண்ணமாக அணிந்த சால்வை இத்தனையும் இலங்க நெடுங்காலம் அழகாகக் காட்சி தந்த அந்த இனிய உருவம் இன்று இல்லை.

நித்தமும் அதிகாலையில் நீராடி திருநீறு அணிந்து தனது குலதெய்வமாகிய காரைநகர் மருதடி விநாயகரிடம் செல்லாத நாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை எனலாம். அவருடைய 77 வருட வாழ்க்கையில் நான் அறிந்தவரையில் நோய் துன்பமென்று எப்போதாவது படுக்கையாய் கிடந்ததை அறியேன் காரைநகரில் முதன் முதலில் "சோமசெற் கார்" வைத்திருந்த பெருமையும் சோமண்ணையென்றால் காரைநகர் கலங்கும் என்றதையும் முன்னோர் கூறியதை கேள்விப்பட்டிருக்கின்றேன்.

காரைநகர் பதிவாளராக 25வருடங்களுக்கு மேலாக சேவையாற்றியதுடன் அவருடைய சேவையால் பயனடைந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் அவரை நன்றியுடன் நினைவு கூறுகின்றார்கள்.

சோமுஐயா ஆண்டிகேணி ஐயனாரின் தீவிர பக்தன், ஈழத்துச்சிதம்பரத்தில் பூசை வழிபாடுகள் சிறந்த முறையில் நடைபெற அரும்பாடுபட்டவர், ஈழத்துச் சிதம்பரம் திருப்பணிச்சபை, அன்னதான சபை, மணிவாசகர்சபை போன்ற சபைகளில் மட்டுமல்ல காரைநகரில் அவர் சேவையாற்றாத சபைகளே இல்லை எனலாம்.

சித்தன்கேணியில் வசிக்கும் காலத்தில் என்னிடம் அடிக்கடி வந்து காரைநகர் பிரச்சினைகள் பற்றி அலசி ஆராய்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுதலடைவார். எமக்கெல்லாம் பல்வேறு நெருக்கடிகளில் மனது சோர்வடையும் சந்தர்ப்பங்களில் அந்தப் பெருமகனுடன் உரையாடினால் எல்லாமே பறந்து விடும். அப்படி ஒரு அரவணைப்பும் தட்டிக் கொடுத்து உற்சாகப்படுத்தும் பெருந் தன்மையும் அவருக்கே உரிய சிறப்பு அம்சங்களாகும்.

அவர்தம் நீண்ட நாளைய பெருவாழ்வு நிலை கொள்ளாமல் போய் விட்டதே என்று தவித்து நிற்கும் நாம், யாவும் இறைவன் நியதிப்படி அமைகின்றன என்ற பேருண்மையை மனதிற் கொண்டு அமைதி அடைய வேண்டியவர்களாகின்றோம்.

எனவே நாம் சோமுஐயா அவர்களின் ஆன்மா சாந்தியடைய ஈழத்துச் சிதம்பர சுந்தரேசப்பெருமானதும் சௌந்தராம்பிகை பெருமாட்டியினதும் திருவடித் தாமரைகளை வணங்குவோமாக.

சாந்தி சாந்தி சாந்தி

**க.சிறீகரன்**

கிராம உத்தியோகத்தர்

வட்டுக்கிழக்கு, சித்தன்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பிலே தெய்வமாய் .....

அண்மையிலே எம்மை விட்டுப் பிரிந்து இறை கழலை அடைந்த அமரர். திரு. கார்த்திகேசு சோமசுந்தரம் அவர்களை நினைக்கும்பொழுது பாரதியாரின் பண்பிலே தெய்வமாய்..... என்ற பாடலடியே நினைவுக்கு வருகின்றது.

நான், காணி மேலதிக மாவட்டப்பதிவாளராக வந்ததன் பின்னர் சந்தித்த பதிவாளர்களுள் மிகவும் தனித்துவமானவராகவும் விசுவாசமானவராகவும் திகழ்ந்தவர் காரைநகர் விவாக, பிறப்பு, இறப்பு பதிவாளர் திரு. கா. சோமசுந்தரம் அவர்கள்.

01.04.1982இல் பதிவாளராக நியமனம் பெற்ற சோமசுந்தரம் அவர்கள் தானாகவே 2009.05.22 இலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்திருந்தார். ஏறத்தாழ இருபத்தேழு வருடங்கள் அவர் தொடர்பான எந்தவொரு முறைப்பாடும் எமது அலுவலகத்துக்குக் கிடைக்கவில்லை. அந்த அளவுக்கு மக்கள் சேவையை அவர் உன்னதமாகப் புரிந்திருக்கின்றார். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிறர் மனம் புண்படக் கூடியதாக ஒரு சிறுகடுஞ் சொல்லைத்தன்னும் அவர் பேசியதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களது அலுவலகத்துக்கு அவர் வருகின்ற பொழுது அணிந்து கொள்ளும். ஆடையும் அவர் உள்ளத்தைப் போன்று பிரகாசமானதே. வாசலிலே வந்தவுடனே வணக்கம் என்று சிரிக்கும். அவரது பாங்கு இன்றும் மனத்திரையில் ஆடுகின்றது.

பல உயர்ந்த பதவிகளுக்குத் தன்னுடைய ஆளுமையாலும் ஆற்றலாலும் அணிசேர்த்த ஐயாவின் பண்பே அவரை எல்லோரும் மதிக்கின்ற உயர்ந்த மனிதராகப் பெருமை பெற வைத்தது.

அத்தகைய உயர்ந்தவரின் ஆத்மாசாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தாருக்கு பதிவாளர் நாயகம் திணைக்களம் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.ப.பிரபாகர்**

காணி மேலதிக மாவட்டப் பதிவாளர்

மாவட்டம், செயலகம்,

யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நெஞ்சில் நிறைந்த அமரர்"

அமரர் சோமசுந்தரத்தின் சிறப்புக்களைக் கூற வேண்டுமேயானால் நேர்மை, நிர்வாகத்திறமை, அர்ப்பணிப்பு போன்ற காரணிகளைக் குறிப்பிடலாம். அவரது காலத்தில் இவரது நேர்மை, அர்ப்பணிப்புக் காரணமாக கூட்டுறவுத் துறை, கிராமசபை, மருதடிப் பிள்ளையார் கோவில் என்பன சிறப்பாக இயங்கின. மக்கள் இவற்றின் பலாபலன்களை அனுபவித்தனர். இவரது நிர்வாகக் காலத்தில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பாகுபாடற்ற ஊழியர்களின் பரிபூரண ஒத்துழைப்புடன் பயனுள்ள இலாபகரமான இயக்கமாக மிளிர்ந்தது.

அமரர் அவர்களின் அயராத அர்ப்பணிப்பான, நேர்மையான சேவையினால் ஒரு சிறிய கோவிலாக இருநேரப் பூசைகளுடன் மட்டுமே இயங்கிய மருதடிப்பிள்ளையார் கோவில் இன்று சுற்றுக் கொட்டகை, கொடிக்கம்பம், சிறப்புத்தேர், பெரிய சப்பறத்துடன் கூடிய மகோற்சவம் நடத்துகின்ற ஆலயமாக மாறியமை பெருமைக்குரிய ஒரு விடயம் என்றால் அது மிகையாகாது. ஈற்றில் அவர் பதிலாளராக, சமாதான நீதவானாக அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டமை வருமானம் குறைந்த சாதாரண மக்களுக்குக் கிடைத்த பரிசு என்றே கூற வேண்டும்.

அமரர் அவர்கள் மக்களுக்குரிய அலுவலகத் தேவைகளை தானே முன்னின்று விரைவாகவும் ஏதும் செலவின்றியும் நிறைவேற்றிக் கொடுத்தார். இவரின் எளிமையான தோற்றமும், உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் மனப்பான்மையும், சிநேகித பூர்வ உறவும் அவர் குறைந்த வயதுடையவராக இருந்தும் எம்மை மிக்க மரியாதையுடன் 'சோமண்ணை' என்று அழைக்க வைத்தன. அவர் எப்பொழுதும் வெள்ளை நிற உடையையே அணிவார். இது அவரது தூய உள்ளத்தினைக் காட்டுகின்றது.

அவர் தனது அலுவலகக் கருமங்களை முடித்துக்கொண்டு எமது வீட்டிற்கு வந்து கிராம அபிவிருத்தி தொடர்பான பல விடயங்களைப் பற்றி சிலமணிநேரம் கலந்துரையாடி மனத் திருப்தியாக வீட்டிற்குச் செல்வார்.

சிறிது காலமாக அவர் நோய் வாய்ப்பட்டிருந்தாலும், வயது முதிர்வினால் ஏற்பட்ட களைப்பினாலும் எங்கள் சந்திப்புக் குறைவடைந்து கொண்டே இருந்தது. நாங்கள் எல்லோரும் அவர்வழி சென்று பொது நோக்காக தொண்டாற்றுவோமேயானால் மக்கள் பெரும் சிறப்பும் பயனுமடைவர். நாடு செழிப்படையும். அமரர் போல் ஒருவர் வாய்ப்பதற்கு எமது கிராமம் (தமவமிருக்க) வேண்டும்.

அவர் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திப்போமாக.

**கே.கே.நடராசா**
இளைப்பாறிய அதிபர்
காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்

அமரர் சோமசுந்தரம் ஐயா பற்றி ஓரிரு வார்த்தைகளாவது சொல்ல வேண்டிய கடப்பாடு எங்களுக்குண்டு. ஏனெனில் ஐயாவை ஒரு நாளைக்கு ஒரு தடவையாவது கண்டு கதைக்கும் சந்தர்ப்பங்கள் எங்களுக்கு ஏற்பட்டன.

இந்த ஊரில் இருபதாண்டு காலத்துக்குக்கிட்ட வாழ்ந்த பெரியவர் அவர். தமது ஊரான காரைநகரில் இருந்தது போல இந்த ஊரையும், மக்களையும், சமய கல்வி நிறுவனங்களையும் மிகவும் நேசித்தவர். காரை சிவனாலய மணிவாசகர் விழாவின் சிறப்பினை இந்த ஊர் மக்களுக்கு அறிமுகப்படுத்தியதில் ஐயாவின் பங்கு பெரியது.

அதே போல இங்குள்ள ஆலயங்களுடனும் ஈடுபாடு கொண்டிருந்தார். விசேசமாக துறட்டிப்பனை முத்துமாரி அம்பாள், சித்தங்கேணி மகாகணபதிப்பிள்ளையார் கோயில்களைக் குறிப்பிடலாம்.

காரைநகரில் விவாக பிறப்பிறப்பு பதிவாளராக அவர்தொழில் புரிந்தமையானது இவ்வூர் மக்களுக்கும் நன்மையாயிற்று எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரிந்த மனப்பாங்கு கொண்டிருந்த சோமையா இவ்வூர் மக்களுக்கும் தேவை ஏற்பட்டபோது, அவற்றைக் கச்சேரியிலிருந்து பெற்றுக் கொடுத்து வந்தார். இந்தச் செயற்பாட்டினால் ஏழை மக்களின் அன்புக்கும், நம்பிக்கைக்கும் உரியவராக விளங்கினார்.

அமரர் சோமையா அவர்கள் தொடக்கத்தில் "வட்டு இந்து ஆரம்பப்பிரிவு பாடசாலைக்கு" அண்மையில் வாழ்ந்ததால், அப்பாட சாலையின் வளர்ச்சியில் ஆர்வம் உடையவராக விளங்கினார். இவரது பெறாமகள் இப்பாடசாலையின் பொறுப்பாசிரியராக இருந்ததால், அவரைக் கொண்டு சில நல்ல செயற்பாடுகளைச் செய்வித்தார். ஊர்மக்களிடம் நிதிபெற்று பாடசாலையின் முன்புறமதில் அமைக்கப்பட்டது. கல்வி இலாகாவில் பணியாற்றிய தமது மகன் மூலம் கல்வி இலாகாவின் உதவி பெற்று இப்பாடசாலையில் தரம் ஐந்துக்கு ஒரு மாதிரி வகுப்பறை அமைக்கப்பட்டது.

'ஊருக்கு உழைத்திடல் யோகம் – புகழ்
ஓங்கிடுமாறு வருந்துதல் யாகம்'

என்ற பாரதியாரின் வாக்குக்கமைய அமரர் இவ்வூருக்கு கிடைத்தற்கரிய பெரியவராக வாழ்வாங்கு வாழ்ந்து காட்டியவர் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் அவர்களிடம் 'செழுங்கிளை தாங்கும்' சிறந்த பண்பும் மிளிர்ந்தது.

ஆசிரியையாகப் பணியாற்றிய தமது பெறாமகளை தங்கள் மகளாகவே பேணிக்காத்து, தாம் வாழ்ந்த வட்டுக் கிழக்கில் திருமணம் செய்து வைத்தார். இதனால் இந்த ஊரை தங்கள் புகுந்த ஊராகவும் ஆக்கிக்கொண்டார்.

தம்மை அண்டி வந்த உறவினர்களை ஆதரித்துக் காப்பாற்றும் உயர்ந்த பண்பும் அவரிடம் காணப்பட்டதை, இரண்டொரு செயற்பாடுகளால் அறிந்து கொண்டோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

– திருக்குறள் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வணங்கிய அவரின் குலதெய்வமான வீரகத்தி விநாயகரின் சேவடிக்கீழ் அழியாப் பேரின்பத்தை அடைவாராக!

1) தொல்லைப்பிறவித் துயர்மா கடலுள்
அல்லல் வழியில் அழுந்தல் முறையோ?
செல்வா! பிரமச் செழுமாமணியே!
நல்லாய் கரை ஏற்றிடும் ஐங்கரனே!

2) அச்சம் விடுத்தேன் அரனார் முதலோர்
மெச்சும் படியாய் மிளிர்ஐங்கரா! நின்
பச்சைத்தளிராம் பதமே பலமாய்
இச்சையுடனே பிடித்தேன் இதமே!

3) பக்தி நெறியில் பலமாய் உறைவார்
அத்தி முகனின் அடியைப் பணிவார்
முத்திபெறுவார், முதன்மை உறுவார்,
சித்தி அடைவார், திடமே! திடமே

– விநாயகர் அநுபூதி –

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**திரு. திருமதி. முத்துலிங்கம்**
ஓய்வுபெற்ற ஆசிரிய தம்பதியினர்
வட்டுக் கிழக்கு. சித்தன்கேணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சோமு அண்ணர்!

பார் புகழும் காரைநகரிலே மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் பல வருடங்களாகப் பணி ஆற்றியவரும், சம்பந்தர் கண்டியில் அமரர்களான கார்த்திகேசு தம்பதிகளின் இரண்டாவது புத்திரனுமாகிய அமரர் கார்த்தியேசு சோமசுந்தரத்தின் மறைவு அவருடைய குடும்பத்தினருக்கு மட்டுமல்லாது எங்கள் சமூகத்திற்கும் ஒரு பேரிழப்பு ஆகும்.

'சோமு' அண்ணருடைய உயரமான தோற்றமும் புன்சிரிப்பும், இனிய சுபாவமும் எனது மனதில் பிரதிபலித்த வண்ணமே உள்ளன. ஒவ்வொரு மனிதனும் பிறந்து, வாழ்ந்து, இறப்பது தான் இயற்கையின் நியதி.

ஆனால் 'சோமு' அண்ணர் பழகுவதில் இனியவர் புன் சிரிப்புடன் விஷயங்களை ஆணித்தரமாகக் கூறுவதில் வல்லவர். செய்யும் தொழிலே தெய்வம் என்பதற்கு இணங்க '1960' ஆம் ஆண்டளவில் சொந்தமான கார் சாரதியாக சிறந்து விளங்கியமையால் 'கார் கார சோமு' என்றால் தெரியாதவர்கள் இல்லை.

ஒளவையார் கூற்றுக்கு இணங்க 'வரப்புயர' என்று ஓர் அரசனை வாழ்த்தியது போன்று 'Registar Somu" (பிறப்பு, இறப்பு, விவாகப்பதிவாளர்) ஆக பல வருஷங்களாகக் கடமை ஆற்றிய பெருமை, எங்களுக்கும், சமூகத்திற்கும், தனி உரிமையாகும். பண்பு, திறமை, ஆகிய இரண்டும் சோமு அண்ணாவின் அணிகலங்களாக விளங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் போற்றவும், ஊர் போற்றும் வகையிலும் மருதடி வீரகத்தி விநாயகர் (மருதடிப் பிள்ளையார்) ஆலய நிர்வாகத்தினருடன் பல ஆண்டுகள் சிறப்புடன் செயலாற்றியமை எவராலும் மறக்க முடியாத சேவையாகும்.

அன்னார் சிவபதமடைந்தாலும், அவர்திறமையுடன் செயற்பட்ட பதிவாளர் சேவைகள் ஆலமரம் போன்று வேரூன்றி விட்டது. சமூக சேவைகளில் சலிக்காத செம்மல் எங்களை விட்டுச் சென்றாலும் அன்னாரின் *Registrar somu* என்ற நாமம் என்றும் அழியாது.

இது இயற்கையின் நியதி போலும். அன்னாரை இழந்து ஆழ்ந்த துன்பத்தில் துயரப்படுகின்ற குடும்பத்தினர். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஏனையோருக்கும் மன ஆறுதல் கூறுகின்றேன்.

அன்னாரின் ஆன்மா சாந்தியடைய குலதெய்வமாகிய மருதடிப் பிள்ளையாரையும், ஈழத்துச் சிதம்பரத்தில் நித்திய அருள்பாலிக்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் பாதங்களையும் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம்சாந்தி!!!**

இங்ஙனம்

**அன்பான தம்பி**

**[சமூகஜோதி] தி.வேலுப்பிள்ளை**

**சடையாளி, வலந்தலை, காரைநகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதருள் மாணிக்கம்

## அமரர் கார்த்திகேசு சோமசுந்தரம்

நீதியையும் நல்லதையும் விரும்பிப் பிறருக்குப் பயன்படும் படியாக வாழ்ந்த பெரியார் அமரர் தந்தையார் முருகேசு உடன் கொண்டிருந்த பாசப் பிணைப்பு பிள்ளைகள் மருமகள், பேரப்பிள்ளைகள் வரை தொடர்ந்து, அமரர் அவர்கள் தங்கள் வீட்டில் இருப்பதைப் போலவே எங்கள் வீட்டிற்கும் வந்து எளிமையாக நாற்காலியில் சாயந்து கொள்வார் நீண்ட நேரம் வரை எங்களுடன் பல சங்கதிகளை இங்கிதமாகக் கூறுவர் எங்கள் வீட்டில் இடம் பெறும் மங்கல, அமங்கல நிகழ்வுகள் எதுவானாலும் முதலில் நிற்பார் அயல் என்ற தொடர்பமட்டுமல்ல உறவு முறைப்பிணைப்பும் நட்பினை வலுப்படுத்தக் காரணங்களாயின. அவருடைய வாழ்வும், சொல்லும், செயல்களும் எமக்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றன.

பெருந்தன்மை என்ற பண்பு நிரம்பப் பெற்றவர் கருத்து முரண்பாடுகள் தோன்றினாலும் அடுத்த கணமே அவற்றை எல்லாம் மறந்து பழையவராகி விடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தர்சினி, நிசாந்தி என்போருக்கு முருகேசுவின் அப்பப்பாவின் பழைய வரலாறுகளை ஒவ்வொன்றாக பதிப்பித்தவர். தர்சினியின் திருமணம் நிறைவேறிய பின்னர் மணமக்களுடன் குடும்ப சகிதமாக அமரரைக்காண இல்லம் நாடிச் சென்ற போது மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு அன்புடன் உபசரித்து அறிவுரையைக் கூறினார்.

முற்றத்தில் அழகாய் முகிழ்ந்திருந்த ரோஜாச் செடியின் மலரில் தர்சினிமனம் லயித்திருப்பதைக்கண்டு, தர்சினி நீஅதனைப் பிடுங்கி உன் தலையில் வை என்று கூறிய வார்த்தை எம் இறுதி வார்த்தையாய் அமைந்தது.

'தம்மின் பெரியார் தமரா ஒழுகுதல்
வன்மையுள் எல்லாம் தலை'

என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஏற்ப வையகத்தில் வாழ்ந்து காட்டிய அமரரின் ஆத்மா சாந்தியடைய அம்மா பகவானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**சிவானந்தராஜா குடும்பம்**

**பாலகுமார் குடும்பம்**

பாலாவோடை, காரைநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனக்கென வாழா பெருமகன்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று என்கிறது திருக்குறள். அவ்வாறு வள்ளுவர் தந்த குறள்வழி புகழோடு வாழ்ந்தவர், அமரர் கார்த்திகேசு சோமசுந்தரம் அவர்கள். எப்படியும் வாழலாம் என்றில்லாமல் இப்படித்தான் வாழ வேண்டும் என்று வாழ்ந்த சான்றோன். சுயநலம் கொண்டவர்கள் பெருகி வாழும் இப்பூவுலகில் பொது நலனுக்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர். அவரது இழப்பு காரைநகரிற்கு பேரிழப்பாகும்.

அன்னாரின் சேவை ஒரு துறையுடன் நின்று விடவில்லை அரசியல்துறை, கூட்டுறவுத்துறை, கல்வித்துறை, ஆன்மீகத்துறை என்று அவரின் துறைகளை அடுக்கிக் கொண்டே போகலாம். சமூக சேவையில் வந்த மிரட்டல்களிற்கும் அடிபணியாது அஞ்சா நெஞ்சத்துடன் சரியானதைத் துணிவுடன் செய்த பெருமகன்.

அடக்கமான பண்பு அதேபோல் உயரமான உடம்பு கன்னங்கறுத்த தலைமுடி வெண்ணிற ஆடை வெள்ளை வெளீர் என்ற பல்வரிசை நிதானமான பேச்சு நேர்மையான வாழ்வு நிதிக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதிவரை போராடும் நெஞ்சத்து துணிவு கோடி கொடுப்பினும் நிலைகுலையாத தன்மை தனக்கு எது சரியெனத் தென்படுகிறதோ அதைச்சளைக்காது எடுத்து இறுதி வரை இயம்பும் உளப்பாங்கு.

இளமையில் துடிப்புள்ள ஒருவராக இருந்தவர் பிற்காலத்தில் சிறந்த பண்பாளராகத்திகழ்ந்தார். காரைநகர் மக்கள் இடம்பெயர்விற்கு பின்னர் 1996ம் ஆண்டு மீளக்குடியேறிய பொழுது குலதெய்வமாகிய காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகப் பெருமான் கோவிலை ஆலய தர்மகர்த்தா பரம்பரையில் உள்ளவரும் பொறுப்புரிமையாளர்சபை நிரந்தர உறுப்பினருமான திரு. ஆ. சிற்றம்பலம் அவர்களுடன் இணைந்து கோவிலில் சிறு கும்பாபிஷேகம் செய்து பூசைகள் உபயங்கள் நடைபெற வழி செய்வார். அத்தோடு 1999ம் ஆண்டு கொதுக் கூட்டத்தில் பொறுப்புரிமை சபைத் தலைவராகத்தெரிவு செய்யப்பட்டார்.

இவரது காலத்தில் 2002ம் ஆண்டு விநாயகர் ஆலய மகாகும்மபாபிஷேகம் நவாலி சாமி விசுவநாதக் குருக்கள் சர்வபோதகராக இருந்து சிறப்பாக நடைபெற்றது.

அவர் பழைய காலங்கள் போன்று கோவிலில் புராண படங்கள் நடைபெற வேண்டும் என்ற நோக்கோடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1) மார்கழித் திருவெம்பாவை நாட்களில் திருவாதவூரடிகள் புராணம் படித்து பயன்சொல்லல்

2) மார்கழித் திருவாதிரைக்கு அடுத்தநாள் திருவாசகம் முன்ஓதல்

3) ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தில்அகத்தியர் தோவரத்திரட்டு முற்றோதல்

4) மகோற்சவ காலங்களில் சமயச் சொற்பொழிவுகள்

5) அவணிமூல நட்சத்திர நன்நாளில் பன்னிரு திருமுறை முற்றோதல் ஆரம்பமாகி தொடர்ந்து 27நாள்களில் முற்றோதல் பூர்த்தி

6) பிள்ளையார்கதை 20நாளும் விநாயகப் பெருமானிற்கு லட்சார்ச்சனை என்பவை ஆரம்பித்து தொடர்ந்து இன்றுவரை நடைபெற்று வருகின்றன.

மருதடி வீரகத்தி விநாயகப் பெருமான் தங்க நகைகள் முழுக்க அணிந்து வீதி உலா வரவேண்டும் என்பதை அடிக்கடி சொல்லுவார். ஒரு தொண்டனாக இலை மறைகாய் போல் அளப்பரிய தொண்டை ஆலயத்திற்கு செய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகை 2011 பௌர்ணமி நாளில் தனது எழுபத்தேழாவது ஆண்டு வாழ்வில் தன் கடமையை பலனை எதிர்பாராது செய்த இக்கனவான் இறை சொன்ன வாழ்வை முடித்து விண்ணுலகு எய்தியமை எமக்கு ஒரு கீதா உபதேசமாகின்றது.

அன்னாரின் ஆத்மா சாந்திஅடைய மருதடி வீரகத்தி விநாயகப்பெருமானை பிரார்த்திப்போமாக.

**சு.வே. சிவகுருநாதன் J.P**

செயலாளர்

பொறுப்புரிமை சபையினருக்காக

மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம்,

காரைநகர்.

**காரைநகரில் வாழ்ந்து அமரத்துவம் எய்திய பதிவுதாரர்கள்**

1) பரியாரி செல்லர்

2) வாட்டாளை செல்லையா

3) பரியாரி க. ஞானப்பிரகாசம்

4) வே. கந்தசாமி

5) பரியாரி சு. இராசசேகரம் J.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி துணை

# மருதடி வீரகத்தி விநாயகர் நவமணி மாலை

தருமை ஆதீனப்புலவர், தமிழாகரர், செஞ்சொற்கொண்டல்,
டாக்டர் சொ. சிங்காரவேலன் M.A.Ph.D
தமிழ்ப்பேராசிரியர். அ.வ.அ. கல்லூரி, மயிலாடுதுறை, தமிழ்நாடு.

வாழ்வினில் வெற்றி வேண்டும்; வனப்புடன் கல்வி வேண்டும்;
தாழ்விலா உள்ளம் வேண்டும்; தகவெனும்வேலி வேண்டும்;
சூழ்வுறுந் தொழிக ளெல்லாம் துலங்கிடும் வெற்றி வேண்டும்;
யாழ்நிலக் காரை மேவும் யானைமா முகனே போற்றி! 1

கடல்கடந் துன்னைப் போற்றிக் கைகுவித் தெளியேன் அந்நாள்
திடமுடன் பாடிப் போற்றத் தெளிந்தநல் லருளை யீந்தாய்!
இடம்பெற அறிவில் மேவி இன்னருள் அமுதை மாந்தி
அடல்பெற வாழ வேண்டி ஐய! நின்பாதம் விழ்ந்தேன். 2

ஆழியொன் றிடையே வந்து அமைந்ததா மெனினும் என்றன்
வாழ்வெலாந் திகழ வைத்த வள்ளலே வீர கத்தி
வேழமா முகனே! நின்னை வேண்டியே விடுக்கும் பாட்டும்
ஆழியைக் கடந்து போந்து ஐயநின் அடியில் வீழும். 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதடி வீற்றி ருப்பாய் மனந்தூய ராகி நிற்போர்
பெருகிட அருளை யீந்தே பிறங்குவாய் இங்கிருந்து
வருகுவோர் தமக்கும் பேசும் வன்மையை வழங்கி நிற்பாய்!
பருகுவேன் அப்பா நின்றன் பண்ணமர் அருளின் வெள்ளம்! 4

கரமைந்து கொண்ட கோவே! கடுந்துயர் தன்னைப் போக்கி
வரமொன்றை எளியேற் கீய வல்லமை கொள்ளா யோ நீ?
சிரமொன்று கையான் பெற்ற சிறுவனே மூத்த செல்வா!
அறமொன்று சிந்தை வேண்டும்; அங்கே நீ இருக்க வேண்டும் 5

காரையூர் அமர்ந்த நம்பா! நற்றமிழ்த் தொண்டே வேண்டும்;
பேரைநான் வேண்ட வில்லை; பெரும்புகழ் வேண்ட வில்லை;
ஊரைநான் வேண்ட வில்லை; ஒண்பொருள் வேண்ட வில்லை;
காரையே நிகர்த்த நின்றன் கருணைதான் ஒன்றே வேண்டும்; 6

மீண்டும் நான் எந்தன் நாள்உன் மென்பாதம் போற்றி நிற்பேன்?
காண்டலே கருத்தாய் உன்றன் சந்நிதி தோய்ந்து நிற்பேன்?
தூண்டுபே ரின்பம் மூளத் தொழுதடி போற்றி நிற்பேன்?
ஆண்டவ! அருளு வாயோ, அந்தப்பே றெளியேற் குண்டோ? 7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதி! துன்பம் என்னை அடையாமற் காக்க வேண்டிக்
குணபதி திருத்தாள் போற்றிக் குளிர்தமிழ் மலர்தொ டுத்தேன்;
மணமிகுத் தன்றா மேனும் மனங்கொள வேண்டும் போற்றி!
இணங்கியே அருளை யீவ இணையடி வீழ்ந்தேன் போற்றி! 8

மருதடி யப்பா நின்னை மகிழ்ந்துள்ளம் கொண்ட தாலே
பெருகிய சொற்கள் பாட்டாய்ப் பின்னிடத் தொடுத்த ளித்தேன்
கருதிடற் சிறுவ னென்று கசிந்து நல லருளை யென்றும்
தருகுவை எனப் பிடித்தேன் தளையிட்டேன் மலர்ந்திட்டேனே 9

## வினை தீர்ப்பாயே!

ஆக்கம் :

காஞ்சிபுரம் டாக்டர் கவிஞர் வரதராஜன்

**பல்லவி**

மருதடிப்பிள்ளையே மகா கணேசா
வீரகத்தி வினாயகா வினை தீர்ப்பாயே (மருதடி)

**அனுபல்லவி**

சங்கரன் சக்தி உமையவள் புதல்வனே
எங்கும் எதிலும் நீயே முதல்வனே (மருதடி)

**சரணம்**

மங்கள வாழ்வே எங்கும் நிலவிட
மகா கணபதியே அருள்புரிவாய்
எங்கள் துயரினைக் களைந்திடு வாயே
எல்லோர் உள்ளமும் நீயிருப் பாயே (மருதடி)

அத்தி முகனே அடைக்கலம் யாமே
நித்தம் துதித்து அடிபணி வோமே
புத்திதரு உயர் சித்தி வினாயகா
ஏத்தித் தொழுவோம் எமைக்காப் பாயே. (மருதடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய தல விருட்ஷமான
300 வருடங்களுக்கு முற்பட்ட மருத மரம்



30.07.2002 அன்று நடைபெற்ற மண்டலாபிஷேக
பூர்த்தியில் கும்பம் வீதி வலம் வருதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவக் கிரியைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணம்

இது இல்லற தருமத்தைக் கைக்கொள்வதற்காகத் ததியான கன்னிகையை முறைப்படி கைப்பிடிக்கும் பொருட்டுச் செய்யப்படும் கிரியையாகும்.

விவாகம் எட்டுவிதமாகும். அவை: பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பனவாகும். பிரமம்: பிரமசரியநிலையில் உள்ள ஒருவனுக்குச் சிவாக்கினி முன் கன்னிகையைத் தத்தம் செய்து கொடுத்தல். பிராசாபத்தியம்: மணமகனின் சுற்றத்தார் பெண் கேட்க மணமகளின் சுற்றத்தார் அதற்குடன்பட்டு கன்னிகையை அக்கினி முன் தத்தம் செய்து கொடுத்தல். ஆரிடம்: பசு, எருது என்பவற்றுள் இரண்டையேனும் ஒன்றையேனும் வாங்கிக் கொண்டு கன்னியை தீ முன் கொடுத்தல், தெய்வம்: வேள்வி முதலிய வழிபாடுகளால் பெற்ற கன்னிகையை தீ முன் கொடுத்தல், கார்ந்தர்வம் – தலைவனும் தலைவியும் தெய்வ வம்சத்தால் தனியிடத்தில் சந்தித்து தாமே மணந்து கொள்ளுதல். இது இரண்டு மாத எல்லையுள் தாய் தந்தையரால் அறியப்பட்டு முறைப்படி விவாகம் செய்து வைக்கப்படல் வேண்டும். ஆசுரம்: சுற்றத்தவர்களுக்கு அவர்கள் வேண்டுவனவற்றைக் கொடுத்துக் கன்னிகையை விவாகஞ் செய்து கொள்வது. இராக்கதம். சுற்றத்தவர்கள் உடன்படாதிருக்க ஒரு கன்னிகையை வலிதிற் கவர்ந்து சென்று விவாகஞ் செய்து கொள்வது. பைசாசம் – உறங்கிக் கிடப்பவளையும் மதுவால் மயங்கிக் கிடப்பவளையும் கூடுதல் இராக்கத,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைசாச மணங்கள் உயர்குடிமக்கள் செய்யும் மணங்களாக மாட்டா இவைகளன்றிச் சுயம்வரம் விடைதழுவல், வில்வளைத்தல் முதலியவற்றாலும் விவாகம் நடப்பதுண்டு. இவற்றுள் ஒருவகை விவாகமும் சீதனம் கேட்டு வாங்குவனவாக இல்லாதிருத்தல் அவதானிக்க தக்கது.

ஆனால் இக்காலத்தில் சீதன மணங்களே மிகுதியாக வுள்ளன. எவ்வளவு சீதனம் மிகுகின்றதோ அந்த மணம் விரைவில் நிறைவேறுகின்றது. விவாவகப் பொருத்தம் பிரதானமன்றாக சீதனப் பொருத்தமமே பிரதானமாய்விட்டது அதனால் அழகும் அறிவும் குண நலன்களுமிருந்தும் சீதனமில்லாத கன்னியர் வாழ்வு பெற முடிகிறதில்லை.இது இக்காலத்தில் விவாகத்திற்கு இடையூறாக வுள்ளது.

இனிக் காதல் மணங்களோ ஆண்டுக் கணக்கில் நீண்டு சென்றும் கைகூடாதபோது சாதல் மணங்களாகின்றன. அப்படியாகும் போது ஒன்றை நினைக்க அஃதொழிந்திட்டொன்றாய் வாழ்வும் கெடுகின்றது.

இனி இக்காலத்தில் கோயில்களில் விவாகஞ் செய்வது தலையெடுத்துள்ளது. பெண்வீட்டில் அல்லது மாப்பிள்ளை வீட்டில் விவாகம் நடப்பதே இயல்பாகவுள்ளது. ஆலயத்தில் விவாகம் நடந்ததாகப் புராண இதிகாசங்களில் யாண்டும் காணவில்லை. இது கிறிஸ்தவ நடைபற்றியுண்டாயது போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைத் தமிழ் மக்களுள் காந்தருவ விவாகமே சிறப்புற்றிருந்ததாயினும் "பொய்யும் வழுவும் புகுந்த பின்னர் ஐயர் வகுத்தனர் கரணமென்ப" எனத் தொல்காப்பியனார் கூறுமாற்றால் காந்தருவ விவாகத்தினால் தவறுகள் உண்டான பின் தந்தை தாயாரால் செய்து வைக்கப்படும் கரண விவாகம் உளதாயதெனத் தெரிய வருகின்றது.

விவாகத்தில் ஜாதகப் பொருத்தம் பார்ப்பதும் வழக்கமாகும். சுத்தமாகக் கணிக்கப்பட்ட ஜாதகங்ளை அனுபவம் மிகுந்த சோதிடர்கள் பார்த்து நிச்சயிப்பதனால் பெரிதும் நன்மையுண்டாகும். பெண் தருவதாக அழைத்த போதும். பெண் தருகவென வந்து வேண்டிக் கொண்ட போதும். காதல் விவாகத்திலும், சுயம்பர விவாகத்திலும் கருப்பகாலத்தில் நிச்சயிக்கப்பட்ட விவாகத்திலும் குருவினால் தெய்வத் திருவருளால் நிச்சயிக்கப்பட்ட விவாகத்திலும் மிருகசீரிடம் மகம், சுவாதி, அனுசுஷம் என்னும் நான்கு நட்சத்திரங்களுளொன்று பிள்ளை அல்லது பெண் நட்சத்திர மாயமைந்த போதும் விவாகப் பொருத்தம் பிரதானமன்று.

தந்தை வழியில் ஏழு தலைமுறைக்குட்பட்டவளும் தாய் வழியில் ஐந்து தலைமுறைக்குட்பட்டவளும் தாய் முறை சகோதரிமுறை உள்ளவளும் விவாகஞ் செய்வதற்குரியவள்அல்லள் மந்திரவாசம் எனப்படும் கூறை பதினான்கு முழ நீளமும் அதில் எட்டிலொரு பங்கு அகலமுமுள்ளபட்டோ, பருத்தியொ கொள்ளத் தக்கது. திருமங்கலியமெனப்படும் தாலி பதினாறு குன்றி மணி எடைமுதல் முப்பத்திரண்டு குன்றிமணி எடைவரையான பொன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணேசவடிவு, தாமரைப்பூ வடிவு, சிவலிங்க வடிவு என்பவற்றுள் ஒரு வடிவாகவும் ஐந்து குண்டுகளும் பக்கத்தில் துவாரமுடையதாகவும் இரட்டைப் பொற்சரடோ பட்டுநூற் சரடோ கோத்ததாகவும் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.

இனிக் கரண விவாக முறையை நோக்குவோம். நல்லொழுக்கமும். அழகும், செல்வவளமும், சுத்த குலமும், குற்றமற்ற தாய் தந்தையரும் சகோதரரும் பந்துக்களும் உடைய கன்னியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

நல்ல முகூர்த்ததில் ஸ்நான சந்தியாவந்தனஙகளை முடித்துக் கொண்டு. முன் கூறியுள்ளவாறு சங்கல்பம், விக்னேசுவர பூசை, புண்ணியாகம், பஞ்சகவ்வியம், காப்புக் கட்டுதல், முளையிடுதல், சிவகும்பபூசை, நவக்கிரகபூசை சிவாக்கினி காரியம் நாந்தீமுகம் என்பன வரையும் செய்து கொண்டு சிவாக்னிக்கு மேற்கு பக்கத்தில் மேடை அமைத்து நெல்பரப்பி ஆசனமமைத்து மணமகனை இடபக்கத்திலும் மணமகளை வலப்பக்கத்திலும் கிழக்குமுகமாக இருக்கும்டி செய்க. இருவருக்கும் பஞ்ச கவ்வியம் கொடுத்து காப்பு கட்டிய பின்னர் கன்னிகாதானம் செய்வர் மணமகனை மகேசுவரனாகப் பாவித்துச் சந்தனம் புக்ஷ்பம் முதலிய உபசாரங்களை கொடுக்கவும் அதன்பின் இருவருடைய மரபில் பிதா,பேரன், பீட்டன் முதலியவர்களின் பெயர்களைப் பெண்ணின் மரபு முதலாக எடுத்து மும்முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைப்படி கூறுக. மணமகளின் தந்தையோ, சகோதரனோ, தாய்மாமனோ அல்லது அம்மரபினரில் பிறர் ஒருவரோ கன்னிகாதானம் செய்வர் மணமகனின் வலக்கையில் மணமகளின் கைகளை வெற்றிலை பாக்கு பொன் என்பவைகளுடன் வைத்து எனது மரபில் எனக்கு முன் பத்து பின் பத்துத் தலை முறையில் உள்ளவர்களுமான பிதிரர்கள் நித்தியமான சிவலோக வாழ்வு பெறும் பொருட்டுஎல்லா வேள்விகளும் பலன்களும் கிடைக்கும் பொருட்டு கன்னிகாதானம் என்னும் இப்பெரியதானத்தை செய்கின்றேன் என்று கூறிக் கொண்டு தீர்த்த நீரை வார்த்து தத்தம் செய்க.

பின்பு யாகேசுவரர்களாகிய உமா மகேசுவரர்களை வணங்கி அனுமதி பெற்று, ஆபரணம் கூறை, தாலிமுதலியவைகளை சுத்தி செய்து சங்கிதா மந்திரங்களால் சம்பாத ஓமஞ் செய்து. சபையில் பெரியோர்களால் தொடுவித்து. ஆபரணங்களையும் கூறையையும் கொடுப்பித்து உமா மகேசுவர மந்திரத்தால் திருமங்கல்யத்தை தரிப்பித்து, அதன் முடிவிலும் மணமகளின் நெற்றியிலும் விபூதி சாத்துவித்து மாலை அணிவித்து இருவரையும் வலமிடமாக மாறியிருக்கச் செய்து. உமாமகேசுவரர்களாகப் பாவித்து சிவமூலமந்திரத்தால் நூறாகுதி செய்க.

பின் பால், தயிர், நெய், தேன், சர்க்கரை, பழம் கலந்த மதுபார்க்கத்தை உண்பித்து, பூதமோதனமாகிய சாதங்கறிகளைச் சிவகாயத்திரி மந்திரத்தால் தரிசிப்பித்து. ஆசமனஞ்செய்வித்து. இருதய மந்திரத்தால் நூறாகுதி செய்து. இருதய மந்திரத்தால் பசுக்கன்றைத்

தரிசிப்பித்து, சிவாக்கினிக்கு வடக்கில் ஏழிடத்தில் இடப்பட்ட நெல்லின் மீது மணமகன் மணமளின் வலக்கையைப் பிடித்துக்கொண்டு ஏழடி நடந்து சென்று, அதனால் மணமகளைத் தன்மரபிற்குரியவளாகச் செய்து அவ்விடத்தில் வைக்கப்பட்டுள்ள அம்மியில் வலதுகாலை இரு கைகளாலும் பிடித்தெடுத்து வைத்துச் சிவகாயத்திரி மந்திரத்தால் அம்மிமிதிப்பித்து, அதனால் இல்லற வாழ்க்கையிலுளவாகும் எவ்வித தாக்கங்களையும் பொறுத்து நிலைக்கும் தன்மை உளதாக்கி, சிவாக்கினியை வலமாகச் சுற்றிவந்து இருவரும் கூப்பிய கைகளால் நெற்பொரியை அக்கினியில் சொரிக. இவ்வாறு நெல்லின்மீது ஏழடி நடத்தல், அம்மிமிதித்தல், நெற்பொரி சொரிதல் என்பவற்றை மும்முறை செய்க.

பின் உமா மகோசுவரர்களை வணங்கி, வியோம வியாபி மந்திரத்தால் பிராயச்சித்தமாக நூற்றெட்டு ஆகுதி செய்து பூரணாகுதி கொடுக்குக. ஆசீர்வாதம் அறுகரிசியிட்டு வாழ்த்துதல் முதலியன ஆனபின் மணமகளின் வலக்கையைப் பற்றிக்கொண்டு கிரகப் பிரவேசஞ் செய்க. மூன்று நாள் வரை காலை மாலையில் சங்கிதா மந்திரங்களால் உபாசனை ஓமஞ் செய்க. நான்காம் நாள் எண்ணெய் விட்டு ஸ்நானஞ்செய்து இரவு அருந்ததி தரிசனஞ் செய்து வணங்கிப் பத்தினிக்கு பதிவிரதா தருமத்தை எடுத்துக் கூறிக் கிருகப் பிவேசஞ் செய்க. ஐந்தாம் நாள் பத்தினியுடன் தன் மனைக்கு செல்லுக. இவையனைத்தும் ஒரே நாளில் செய்வது இப்பொது பெருவழக்காகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## சைவ அபரக்கிரியை இயல்

மேலைப் புண்ணிய பாவங்கட்குப் பொருந்துமாறு இறைவனால் ஆன்மாக்கட்குப் பிறப்புக் கொடுக்கப்படுகிறது. இப் பிறப்புக்களில் மானுடப் பிறப்பு சிறப்புடையது. இம் மானுடப்பிறப்பிலும் சைவ சமயத்தவராகப் பிறப்பது சிவ புண்ணியச் சார்பாகும். சைவராகப் பிறவி எடுத்தமையால் சைவசமயத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை வேத சிவாகம நெறிப்படி வழிபட்டு சைவ சித்தாந்த அத்துவித முத்தியாகிய பேரின்பப் பெருவாழ்வு அடைய முற்படல் வேண்டும். இது தான் மானுடப்பிறப்பின் முற்றாக முடிந்த முடிபாகும்.

எல்லாச் சமயங்கட்கும் அவற்றிற்கெனத் தனித்தனியே பல சமயச் சடங்குகள் இருப்பதை நாமறிகின்றோம்.

சைவராகிய எமக்கு பிறப்பு முதல் இறப்பு வரையும் இறப்பின் பின்னரும் பல சமயச் சடங்குகள் நடைபெறுகின்றன. இவையாவும் சிவாகமங்களில் விதித்தபடி நடைபெறுகின்றன. அப்படியே நடைபெற வேண்டியது இன்றியமையாதது. சைவர் ஒருவரின் மரணத்தின் பின்னர் நடைபெறும் சடங்குகள் அபரக்கிரியை எனப்படும். (அபரம் – பிந்தியது) இக்கிரியைகள் இறந்தவரின் ஆன்மாவின் நன்மைக்காகச் செய்யப்படுகின்றன. ஆன்மா எப்பிறவி எடுத்திருப்பினும் பிதிரர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமாக கிரியைகளின் பயனை அந்த ஆன்மா பெறுகின்றது. பிதிரர்கள் பிரமனால் படைக்கப்பட்டவர்களாகும். இக்கிரியைகளைச் செய்பவர்கள் தன தானிய சம்பத்து, புத்திரலாபம் முதலிய ஐசுவரியங்களைப் பெற்று வாழ்தலுடன் மறுமையில் நற்கதியையும் அடைவார்கள். அவர்களுக்கு தீவினையும், வறுமையும், இடரும் நீங்கும். செய்யாது விடின் ஏழு பிறப்பிலும் பிதிர் தோஷம் ஏற்படும்.

அபரக் கிரியையில் சூர்ணோத்ஸவம், தகனம், அஸ்திசஞ்சயனம் (காடாற்று), அந்தியேட்டி, பாஷாணபூசை (கல்லெடுப்பு) ருத்திரபலி, (பிரபூதபலி) நவசிராத்தம், ஏகோத்திரவிருத்தி சம்கிதை, இடபதானம் ஏகோதிட்டம், மாசியம், சோதகும்பசிரார்த்தம், சுவர்க்கமாதேயம், வைதரணிகோதானம், சபிண்டிகரணம் (வீட்டுக்கிரியை), சிராத்தம் முதலிய கிரியைகள் நடைபெறுகின்றன.

இவற்றில் விசேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி ஆகியவை பிரேதத்திலேயே (கட்டையிலே) தகனத்திற்கு முன்னர் நடைபெறும். மச்ச மாமிச போசனமற்ற நாலாம் வருணத்தாருக்கும் பிரேதத்தில் சமய அந்தியேட்டி தகனத்திற்கு முன் செய்யப்படும்.

மேற்குறிப்பிட்ட கிரியைகளைக் கல்வியறிவு ஒழுக்கங்களிற் சிறந்த ஆசாரியரைக் (குரு) கொண்டு செய்விக்க வேண்டும். இவற்றைச் செய்விப்பவர்களும் (கர்த்தா) கிரியைகளின் தத்துவங் களையும். அவற்றின் பலன்களையும் அறிந்து பக்தி சிரத்தையுடனும் அன்புடனும் செய்தால் நன்மை பயக்கும், இக்கிரியைகளில் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானங்கள் செய்யப்படுகின்றன. தானம் என்பது நற்பயன் குறித்துச்செய்யப்படுபவை எனவே இத்தானங்களை சற்பாத்திரத் திற்குச் செய்தாற்றான் குறித்த பயனைப் பெறலாம்.

நாலாம் வருணத்தாருக்கு சைவாகம விதிப்படியே சைவக்கிரியைகள் நடைபெற வேண்டியது. எமது அபரக்கிரியையில் சூர்ணோத்சவம் தொடக்கம் பாஷாண பூசை வரையுள்ள கிரியைகளை சைவ ஆசாரியார்களும். சபிண்டீகரணம் சிராத்தம் முதலிய கிரியைகளை பிராமண ஆசாரியார்களும் செய்து வைக்கிறார்கள்.

இக்கிரியைகளில் ஏற்படும் சந்தேகங்களை நூலறிவு அனுபவம் உள்ள ஆசாரியார் சிலரிடமே கேட்டு அறிய முடிகிறது. இக்கிரியைகள் பற்றிய நூல்களும் இன்று கிடைப்பது அரிது. இக்கிரியைகளின் தத்துவங்களையும் விளக்கங்களையும் சாதாரண கல்வியறிவுடைய எவரும் வாசித்து விளங்கிப் பயன் அடைய முடியுமென்ற முறையில் இக் கட்டுரை அமையுமென நம்புகிறேன்.

சமய தீட்சை பெற்ற நாலாம் வருணத்தாருக்கும் முப்பது நாள் ஆசௌசமுடையவர்களுக்கும் உரிய கிரியைகளையும், அதன் தத்துவங்களையும் விளக்கங்களையும் ஓரளவு இக்கட்டுரையில் விளக்கிக் காட்டியுள்ளோம். கிரியை செய்யும் முறைகள், அவற்றிற்குரிய மந்திரங்கள் ஆகியவை இக்கட்டுரையில் இடம் பெறவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர் நோய்வாய்ப்பட்டு அல்லது வயோதிபமடைந்து, மரணப் படுக்கையில் இருக்கும்பொழுது அவரது பாவங்கள் நீங்கி நற்கதி அடையும் பொருட்டு, கோ (பசு) தானம் செய்யப்பட வேண்டும். இதனை உத்திராந்தி தானம் என்பர். இது உயிர் உடலை விட்டுப் பிரியும் போது செய்யும் கிரியையாகும். பின்னர் திருமுறைகள் ஓத வேண்டும். திருநீறு அணிவித்து புண்ணிய தீர்த்தம் அல்லது பால் பருக்கி வலது காதில் பஞ்சாட்சர மந்திரம் ஓத வேண்டும்.

மரணித்தவரை குளிப்பாட்டி அலங்காரம் செய்து, தர்ப்பைப்புல் பரப்பி தெற்குப் பக்கம் தலை வைத்துக் கிடத்தல் வேண்டும். தலைப்பக்கம் விளக்கேற்றி வைக்க வேண்டும்.

**மரணச் சடங்கு – சூர்ணோத்சவம்**

தந்தை தாயாருக்கு மூத்த புதல்வனே கிரியை செய்ய வேண்டும். தந்தைக்கு சிரேஷ்ட புத்திரனும், தாயாருக்கு கனிஷ்ட புத்திரனும் கிரியை செய்யும் வழக்கம் உண்டு. புத்திரர் தவிர்ந்த பின் வருவோரும் கிரியை செய்ய உரிமை உடையவர். 1) புத்திரன் 2) மனைவி 3) மகள் 4) தமையன் 5) இளைசகோதரர் 6) சகோதரன் புதல்வன் 7) பிதா 8) தாய் 9) மருமகன் 10) சகோதரி 11) சகோதரி புதல்வன் 12) பிதாவழிச் சபிண்டன் 13) சமானோதகன் 14) தாய்வழிச் சபிண்டன் 15) தாயின் சமானோதகன் 16) சீடன் 17) குரு 18) மகள் கணவன் 19) தோழன் 20) அரசன் இவர்களுள் புத்திரனே பிரதானமானவன். பிரதானகர்த்தா இல்லையாகில் அடுத்தவர் வரிசையாகப் பிரதானமானவர். சில நூல்களில் 32பேர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்பட்டுள்ளன. புத்திரன் அல்லாத ஒருவர் கர்த்தாவாகக் கிரியை செய்வதாகில் அவர் தனது பெற்றோரில் ஒருவருக்காவது கிரியை செய்தவராக இருத்தல் வேண்டும்.

புத்திரர் இங்கில்லாத காரணத்தினால் மரணக்கிரியை வேறு ஆசௌச வழியிலுள்ளவர் ஒருவர் செய்தால், புத்திரர் பின்னர் வருவராகில் எஞ்சிய கிரியைகளைப் புத்திரர் செய்யலாம். அதே போல் புத்திரர் மரணக்கிரியைகளை செய்து மற்றைய கிரியைகளுக்கு நிற்க முடியாது விட்டால் மற்றைய கிரியைகளை வேறு ஒருவர் கர்த்தாவாக இருந்து செய்யலாம். ஆனால் இவரையும் ஆரம்பக் கிரியையிலேயே கர்த்தாவுடன் சேர்த்து கிரியைகள் செய்ய வேண்டும்.

அந்தியேட்டிக் கிரியை மாத்திரம் 21 நாட்களுக்கு மேலும் 31நாள்களுக்குள்ளும் செய்யலாம். புத்திரர் வெளியூர் போக வேண்டும் என்பதற்காக, இத்தினங்கட்கு முன்னதாக அந்தியேட்டி சபிண்டிகரணம் முதலியவற்றை செய்ய முடியாது.

மரணக் கிரியை நடைபெற உள்ள இடத்தில் மண்டபம் அமைத்து வெள்ளை கட்டி, மாவிலை, தோரணம், பூச்சரம் முதலியவற்றால் அலங்கரித்து அந்த இடத்தை கோமயத்தினால் மெழுக வேண்டும்.

மரணக்கிரியையின் போது (பக்தி ஸ்தோத்திரம்) திருமுறைகள் ஓதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணக்கிரியையில் சூர்ணோத்சவம் செய்யப்படும். நடுவில் ருத்திர கும்பமும் அதனைச் சுற்றி அட்டதிக்குப் பாலகர் கும்பமும், மேற்குப் பக்கத்தில் புண்ணியாகவாசன கும்பமும், கிழக்குப் பக்கத்தில் உரல், உலக்கை, பேரிக்கு பதிலாக மணி, மயானத்துக்குக் கொண்டு செல்லும் மண்குடக் கும்பம் ஆகியவை வைக்கப்படும். இக்கும்பத்தை மயானத்திற்குக் கொண்டு செல்வது வழக்கமாகவுள்ளது. குரு உரிய கிரியைகள், பூசைகள், வழிபாடுகள் செய்வார்

அபிஷேகம் முதலியன செய்யும் பொருட்டு பிரேதத்தை வீட்டின் தென்புறத்தில் வடக்கு நோக்கிக் (தெற்குப் பக்கம் சிரசாக) கிடத்த வேண்டும். பின்னர் கர்த்தா அரப்பு எண்ணெய் முதலியன சிரசில் வைப்பார். ஆசௌசகாரர்களும் அரப்பு எண்ணெய் முதலியன வைப்பார்கள். பின்னர் அரிசிமா, மஞ்சள்மா, அபிஷேகக்கூட்டு (ஆமலகம்) பால், தயிர், இளநீர் முதலியவற்றால் அபிஷேகம் செய்ய வேண்டும். கர்த்தா மேற்கு முகமாக நின்று சங்காரக் கிரமமாக அதாவது கீழிருந்து மேலாக கர்த்தாவின் புறங்கையினால் வேறு ஒருவர் உதவியுடன் இவ்வபிஷேகம் நடைபெறுதல் வேண்டும். பின்னர் கும்ப அபிஷேகம் நடைபெறும். அதாவது பன்னீர் போன்ற வாசனைப் பொருட்கள் முதலியனவற்றைச் சிரசிலே சாத்த வேண்டும். பின்னர் பிரேதத்தை அலங்கரித்து மண்டபத்திற்குக்கொண்டு வந்து தெற்குப் பக்கமாக தலையை வைத்து திருநீறு சங்காரக் கிரமமாக சாத்த வேண்டும். பின்னர் சுண்ணம் இடிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகு, மஞ்சள்பொடி, என்பனவற்றை உரலில் இட்டு பேரிக்குப் பதிலாக மணியடித்து சிப்த மந்திரம் சொல்லி எட்டு தரம் இடித்து பின்பு, திருப்பொற் சுண்ணப்பாட்டுப்பாடி, சுண்ணமிடிக்க வேண்டும். பின்னர் சுண்ணப்பொடியை கர்த்தா பிரேதத்தின் இரு கண்களிலும் சாத்தி நீருடன் சேர்த்து பிரேதத்தின் முழு உடலிலும் தெளித்தல் (புரோட்சித்தல்) வேண்டும். இது தற்காலம் நடைபெறும் முறையாகும். சுண்ணமிடித்து சுண்ணப் பொடியும் சேர்த்து பிரேத அபிஷேகம் நடைபெற வேண்டும் என்பது சாஸ்திர விதியாகும்.

பின்னர் பெண்கள் வாய்க்கரிசி இட்டு பிரேதத்தின் வாய், கை, கால், விரல்கள் ஆகியவற்றைக் கட்டி பூத உடலை வஸ்திரத்தால் மூடிக்கட்டி பாடையில் வைத்து கால் - முன்பக்கமாக மயானத்திற்குக்கொண்டு செல்ல வேண்டும். கர்த்தா நெருப்புச் சட்டியுடன் பூத உடலுக்கு முன்பாகவும், ஆசௌச உரிமை யாளர்கள் பூத உடலுக்குப் பின்பாகவும் செல்ல வேண்டும். ஆசௌசமில்லாதவர் பின்செல்லல் கூடாது. மயானத்தை அடைந்து தெற்கே சிரசாக முதலில் தலைப்பக்கமும் பின்னர் கால் பக்கமுமாக இறக்குக. மயானத்தில் வடக்குத் தெற்காக விறகுகளை அடுக்கி அதன் மேல் பூத உடலை வைத்து சுற்றத்தார் வாய்க்கரிசி போடுதல் வேண்டும். பின்னர் கர்த்தா மட்குடத்தை இடது தோளில் வைத்து சிதையை (அப்பிரதட்சணமாக) இடப்பக்கமாகச் சுற்றி வந்து குடத்தைத் தலைப்பக்கத்தில் வைத்து கும்பஜலம், அரிசி சொர்ணம் (பவுண்) அல்லது காசுடன் வாய்க்கரிசியிட்டு பின்னர் குடத்தை முன்போல இடத்தோளில் வைத்து கொள்ளிகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சிதையை இடப்புறமாக மூன்று முறை சுற்ற வேண்டும். ஒவ்வொரு சுற்றுக்கும் குடத்தில் கத்தி நுண்துவாரமிட்டு குடநீர் ஒழுகும் படி செய்து மூன்றாவது முடித்து தலைப்பாகத்தில் தெற்கு முகமாக நின்று பின் புற பிரணவம் சொல்லிக் கொள்ளியை பிரேதத்தின் சிரசில் வைத்து குடத்தை முன்புறமாக உடையும்படி போட்டு விட்டு, பின்பு கால் மாட்டில் சென்று பவித்திரம், பூணூல் ஆகியவற்றை சிதையில் போட்டு (தனக்கு மூத்தவராகில்) விழுந்து நமஸ்கரித்து திரும்பிப் பாராமல் செல்ல வேண்டும்.

மரணித்தவரும், கர்த்தாவும் மச்ச மாமிச போசனம் இல்லாதவர்களாயின் இறந்தவருக்கு உடன் மயானத்திலே அந்தியேட்டி கிரியை செயது தகனம் செய்யப்படும்.

### அஸ்தி சஞ்சயனம் – காடாற்று – சாம்பல் அள்ளல்

தகனத்திற்கு அடுத்த நாள் அல்லது மூன்றாம், ஐந்தாம், ஏழாம், ஒன்பதாம் நாள்கள் ஒன்றில் அஸ்தி சஞ்சயனம் செய்க. தகனம் செய்யப்பட்ட இடத்தை கால்பக்கமாக இருந்து தலைப்பக்கம் தண்ணீர் ஊற்றி அக்கினியை அணைக்கவும். தலைப் பக்கத்தில் விளக்கேற்றி கும்பம் வைத்து பூசை அபிஷேக திரவியங்களை வைக்கவும், மண்கலசத்தில் பால் ஊற்றி அதை தலைப்பக்கத்தில் ஒரு முக்காலியில் வைக்கவும். தகிக்கப்பட்ட உடல் எலும்பு மேனி யில் முழு உருவமாக இருப்பதாகப் பாவனை செய்து கீழிருந்து மேலாக (சங்காரக் கிரமமாக) அபிஷேக திரவியங்களால் அபிஷேகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்க. கர்த்தா மேற்கு நோக்கி நின்று புறங்கையால் இன்னொருவரின் உதவியுடன் அபிஷேகம் செய்ய வேண்டும். பின்னர் முழங்கால்கள் (சத்தியோசாதம்) நாபி (வாமதேவம்) மார்பு (அகோரம்) நெற்றி (தற்புருஷம்) தலை (ஈசானம்) ஆகிய ஐந்து இடங்களிலும் விபூதி, சந்தனம், புஷ்பம் வைத்து தூபதீபம் காட்டி பூசித்து மேற்குறிப்பிட்ட ஐந்து இடங்களிலும் உள்ள எலும்புகளில் ஒவ்வொன்றையும் கிரமப்படியே எடுத்து தலைமாட்டில் உள்ள பாலுள்ள கலசத்தில் வைத்து அக்கலசத்தை வஸ்திரத்தால் மூடவும். பின்னர்மிகுதி எலும்புகள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து ஒரு கடகத்தில் எடுத்து வைக்கவும். பின்னர் அவ்விடத்தைச் சுத்தம்செய்து பண்படுத்தி நவதானியம் விதைத்து நெற்பொரி, மாஅடை, தாம்பூலம், பழம் முதலியவைகளைப் பூதப் பிரேத பைசாங்களின் பொருட்டுப் பலியிட்டு, முன்னர் கலசத்தில் எடுத்த அஸ்தியையும் கடகத்தில் எடுத்த மிகுதி அஸ்தி சாம்பலையும் புண்ணிய தீர்த்தம், சமுத்திரம் ஆகியவற்றில் கர்த்தா வடக்கு முகமாக நின்று தெற்குப் பக்கமாக போட்டுக் கலைத்து விடவும். பின்னர் கர்த்தா அந்த நீர் நிலையில் ஸ்நானம் செய்து அங்கு நக்கினப்பிரச்சாதனம் என்னும் நக்கினதானம் செய்ய வேண்டும். ஒரு குடத்தில் பச்சை அசிரியை நிரப்பி அக்குடத்தைச் சுற்றி வஸ்திரம் கட்டி வெங்கலப் பாத்திரத்தில் (விளக்கு)நெய்யூற்றி குடும்பஸ்தராக உள்ள சிவப்பிரமாணருக்கு பரம சிவனைத் தியானித்துத் தானமாகக் கொடுக்கவும். இறந்தவரின் நிருவாணம், பசி, தாகம் இருள்களை நீக்கும் பொருட்டு இத்தானம் செய்யப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஸ்தியின் ஒரு பகுதியை அந்தியேட்டிக்கிரியைக்காகவோ அல்லது காசி கங்கை முதலிய புண்ணிய தீர்த்தங்களில் கரைப்பதற்காகவோ எடுத்து வைப்பது தவறாகும்.

## எட்டுக் கிரியை

இக்கிரியை பற்றி பத்ததிகளிலோ ஆகமங்களிலோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இது ஒரு நாட்டு வழக்கமாக வந்துள்ளது தகனத்தினம் தொடக்கம் சபிண்டீகரணம் வரை இறந்தவரது படத்தை வீட்டில் ஒரு இடத்தில் வைத்து விளக்கேற்றி, தண்ணீர், இளநீர் வைத்து தாம் உண்ணும் உணவில் ஒரு சிறுபகுதியை அங்கு படைத்து தூபதீபம் காட்டி பூசித்து வரும் வழமை உண்டு. அஸ்தி சஞ்சயனத்தின்பின் எட்டாம் நாளுக்கு முன்னர் ஒரு தினத்தில் இறந்தவர் விரும்பிச் சாப்பிட்ட எல்லாப் பண்டங்களும் (உண்பன, தின்பன, பருகுவன) படைத்து தூபதீபம் காட்டி பூசித்து எட்டுக்கிரியையை முடிப்பார்கள். (சில ஊர்களில் மச்சமாமிசம் படைப்பதில்லை) அசௌசகாரர்கள் அங்கு சாப்பிடுவார்கள். (இவை பிரபூதபலி என்ற கிரியைக்கு சமனாக நடைபெறுகிறது)

## அந்தியேட்டி – கல்லெடுப்பு

அந்தியேட்டி சமய அந்தியேட்டி, விசேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி என மூன்று வகைப்படும். இங்கு சமய அந்தியேட்டி பற்றிய விபரங்களே தரப்படுகின்றன. விசேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி பிரேதத்தில் (கட்டையில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகனத்திற்கு முன்னர் செய்யப்படும். மச்சமாமிசம் புசியாதவர்கட்கும் சமய அந்தியேட்டி பிரேதத்தில் செய்யப்படும். அந்தியேட்டி இறந்த 21ஆம் நாளின் மேல் 31ஆம் நாள்களுக்குள் செய்யலாம். புத்திரன் அல்லாத வேறு ஒருவர் கர்த்தாவாக இருப்பின் சுப நாள் பார்த்து அந்தியேட்டி செய்ய வேண்டும். நதிக்கரை, குளக்கரை, நந்தவனம், வீடு ஆகிய இடங்களில் அந்தியேட்டி செய்யலாம். அந்தியேட்டி என்பது இறுதியிற் செய்யும் யாகம் எனப்பொருள்படும். பிரேத சரீரத்திற்குப் பதிலாக தர்ப்பையினால் புத்தலிகா செய்யப்பட்டு அந்தியேட்டிக் கிரியை செய்யப்படும். சூர்ணோத்தவக்கிரியை எல்லாம் முடித்து புத்தலிகாவை தகனம் செய்வார்கள். இதைப் புனர்த்தகனம் எனக் குறிப்பிடுவர். பின்பு அங்கு பாஷாணம் (கல்லு) ஸ்தாபித்து அதற்கு அபிஷேகம் பூசை முதலியன செய்து தர்ப்பணம், பிண்டம், ருத்ரபலி, பிரபூதபலி (முன்னர் எட்டுக்குச் செய்தது போன்று) செய்யப்படும். இங்கு 30 பிண்டங்கள் இடப்படும். இப்பிண்டங்கள் பச்சை அரிசிச்சாதம் கறி வகைகள், பலகாரவகைகள், பழவகைகள், பட்சணங்கள் ஆகியவை சேர்த்துப் பிசைந்து உருட்டி இட வேண்டும். வாஸோதகம் (சீலையோடு சேர்த்துத் தர்ப்பணம்) செய்யப்படும். இங்கு 525 தர்ப்பணம் செய்யப்படும். இவை ஏகோத்திரவிருத்தி என அழைக்கப்படும். ருத்திரபலி சிவப்பிரீதியின் பொருட்டு செய்யப்படுவது. பின்னர் பாஷாணத்துக்கு தூபதீபம் காட்டி பூசை முடித்து கும்பம், பாஷாணம், பிண்டம் ஆகியவற்றை அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் வைத்து மங்கல வாத்தியத்துடன் எடுத்துச் சென்று நீர் நிலையடைந்து பிண்டத்தை ஒருவரும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் பின் கும்பத்தை ஒருவரும் அவர்பின் பாஷாணத்தை ஒருவருமாக எடுத்துச் சென்று கர்த்தா இடுப்பளவு தண்ணீரில் வடக்கு முகமாக நின்று தலைக்கு மேலாக தெற்குப் பக்கமாக பிண்டத்தை முன்னும், பின்னர் கும்பத்தை வடக்குப் பக்கமாகவும், பாஷாணத்தை தலைக்கு மேலாகவும் தெற்குப் பக்கமாக ஜலத்தில் விட்டு ஸ்நானம் செய்து, வீட்டு வாசலை அடைந்து வேப்பிலை தின்று அக்னி, சாணம், மண், வெண்கடுகு ஆகியவற்றை ஸ்பரிசித்து (தொட்டு)கல்லின் மேல்கால் வைத்து வீட்டிற்குள் செல்லவும். கர்த்தாவுக்கு ஆரத்தி எடுப்பதும் உண்டு. உலக்கையைக் கடந்து செல்லும் வழக்கம் உண்டு. இவை வைதிகக் கிரியை முறையாகும்.

## வீட்டுக் கிரியை – சபிண்டீகரணம்

வீடு கழுவிச் சுத்தம் செய்து புண்ணியாகவாசனம் செய்த பின்னர் விட்டுக்கிரியை செய்ய வேண்டும். அந்தியேட்டிக் கிரியையை முப்பதாம் நாளும், வீட்டுக்கிரியை முப்பத்தொராம் நாளும் நம்மவர்கள் செய்வது வழமையாக உள்ளது. எமக்கு ஆசௌசம் முப்பது நாள்கள், அதாவது முப்பத்தொராம் நாள் காலையில்தான் ஆசௌசம் நீங்கும். அதன் பின்னர் தான் புண்ணியாகவாசனம் செய்ய வேண்டும். முப்பதாம் நாள் அந்தியேட்டி செய்து அன்று புண்ணியவாசம் செய்வது சரியல்ல, அடுத்தநாள் காலை புண்ணியாகவாசனம் செய்து வீட்டுக் கிரியை சமையல் ஆயத்தங்கள் செய்ய முடியாது. எனவே முப்பத்தோராம் நாள் புண்ணியாகவாசனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து முப்பத்திஇரண்டாம் நாள் வீட்டுக்கிரியை செய்யலாம். (முப்பத்தோராம் நாள் அந்தியேட்டி செய்து அன்றுமாலை புண்ணியாகவாசனம் செய்வதும் நல்லது)

வீட்டுக்கிரியை பிராமண ஆசாரியரைக் கொண்டு செய்தல் வேண்டும். தானம் ஏற்கும் தகுதி பிராமணருக்குத்தான் உண்டு. முதலில் விக்கினேஸ்வரர் பூசை, புண்ணியாகவாசனம், பஞ்ச கவ்விய பூசை, முதலிய கிரியைகளைச் செய்து நவசிரார்த்தம், ஏகோத்திர விருத்தி, சம்கிதை, இடபதானம் ஏகோதிட்டம், மாசிகங்கள், சோதகும்ப சிரார்த்தம், சபிண்டீகரணம் ஆகிய கிரியைகள் நடைபெறும்.

## நவசிறார்த்தம்

நவம் - புதியது, எனவே முதலில் செய்யும் சிரார்த்தம், நவசிரார்த்தத்தால் பிரேததன்மை நீங்கும், சந்தனம், புஷ்பம், தூபதீபமின்றி பச்சை அரிசி, காய்கறி வகைகள் தானம் செய்வது நவசிரார்த்தமாம்.

## ஏகோத்தர விருத்தி

இதை இங்கு இரணிய தானமாகச் செய்யவும் - விபரம் அந்தியேட்டிக் கிரியையில் சொல்லப்பட்டுள்ளது.

## சம்கிதை – சங்கிதா சிறார்த்தம்

இச்சிரார்த்தம் செய்வதால் தீட்சை பெற்றுக் கொண்டபின் ஆசாரத்தில் வந்த குற்றம் நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடபதானம் – இடபோத்சர்ணம்

எருதுக்கு அலங்காரம் செய்து அதனைப் பூசித்து தானம் செய்தல், இறந்தவருடைய தானதரும பலன்களை தரும வடிவிலான இடபத்தின் மூலம் சிவபெருமானிடத்தில் சேர்ப்பித்தல். ஆன்மாவை இறைவனது திருவருள் வழியின் கண் நிற்குமாறு செய்தலாகும். இடபதானத்திற்கு எருது கொடுக்க வசதி இல்லாதவர்கள், ஒரு தாம்பாளத்தில் அரிசியைப் பரப்பி, அதிலே இடபத்தைக் கீறி அதன்மேல் தேங்காய் ஒன்றைவைத்து, அதில் இடப தேவரை ஆவாகனம் செய்து பூசித்து வழிபாடு செயத பின்னர் கர்த்தாவானவர் தமது இரு கரங்களாலும் இடபதேவரைப் பற்றி ஒவ்வொரு திக்கிலும் கொண்டு சென்றதாகப் பாவித்து, அதற்குரிய மந்திரங்களைக் கூறி வழிபாடு செய்து அதனை தட்சணை முதலிவற்றுடன் தானமாகக் கொடுக்கவும்.

## ஏகோதிட்டம்

இது இறந்தவரைக் குறித்துச் செய்யப்படும் தானமாகும். சற்பாத்திரரான ஒரு குருவை மேற்கு முகமாக இருக்கச்செய்து. ஆசனம் கொடுத்து சந்தனம், புஷ்பம், எள்ளு ஆகியவை கொடுத்து உபசாரங்கள் செய்து கர்த்தாவின் சக்திக்குத் தக்கவாறு தானங்கள் கொடுக்க வேண்டும். ஏகோதிட்டத்திற்கு இருபத்துநான்கு தானங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவையாவன பவித்திரம் பூணூல், கமண்டலம், உருத்திராக்கம், பாதுகை (மிதியடி), தண்டம், கௌபீனம், விபூதிப்பை, யோகபட்டம், குடை, குல்லாய், மேல்வஸ்திரம் (சால்வை) வஸ்திரம், பொன், மோதிரம், ரத்தினம், நெய், வெண்ணெய், பசு, பூமி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போசனத்திற்கு வேண்டிய பொருள்கள், சர்வதானியங்கள், சர்வ அலங்காரப்பொருள்கள், தாசீதாசர்கள் இவற்றில் சிலவற்றை இரணியதானம்(காசு) ஆகவும் கொடுக்கலாம். பின்னர் ஏகோதிட்டத் திற்கு ஒரு பிண்டமிட்டு அதற்கு சந்தன பத்திர புஷ்பம் சாத்தி தூபதீபம் காட்டி பூசிக்கவும். பின்னர் ஏகோதிட்டக் குருவை வழியனுப்பி, அந்த இடத்தைத் சுத்தி பண்ணி, கர்த்தா ஸ்நானம் செய்ய வேண்டும். ஆசாரியார் மீண்டும் புண்ணியாகவாசனம் செய்து பஞ்சகவ்வியத்தினாலே தன்னையும், கர்த்தாவையும், இடத்தையும், பொருளையும் சுத்தம் செய்து கொள்வார். ஏகோதிட்டம் ஏற்கும் குருவை இறந்தவராக வரித்துச் செய்வதினால் அங்கு ஆசௌசம் ஏற்படுகின்றது. இதனாலேதான் மேற்கூறியவாறு சுத்திகள் செய்யப்படுகின்றன.

### மாசிகங்கள்

மாசிகங்கள் முதல் வருடம் முழுவதும் இறந்த திதியில் செய்யப்படும் சிரார்த்தமாகும். ஏகோதிட்டத்தோடு முதல் மாசிகம் முடிவுற்றதாகக் கருதப்படும். எஞ்சியிருப்பது பதினொரு திதியில் வரும் மாசிகமாகும். இவற்றுடன் இடைக்காலமாசிகங்கள் நான்கு சேர்ந்து பதினைந்து மாசிகங்கள் கொள்ளப்படும். இறந்த திகதியிலிரு ந்து 27ஆம் நாளுக்கு மேல் 30ஆம் நாளுக்குள் செய்வது ஊன மாசிகம். 40நாள்களுக்கு மேல் 45ஆம் நாள்களுக்குள் செய்வது ஊனதிரிபட்ச மாசிகம், 170ஆம் நாள்களுக்கு மேல் 180ஆம் நாள்களுக்கிடையில் செய்வது ஊனஷான மாசிகம், 305ஆம் நாள்களுக்கு மேல் 350ஆம் நாள்களுக்குள்செய்வது ஊன ஆப்திக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசிகம், இந்த இடைக்கால நான்கு மாசிகங்கட்கும் திதி நியமம் கொள்ளப்படுவதில்லை. செய்யும் தினம் சுபதினமாக இருக்க வேண்டும். இந்தப் பதினைந்துமாசிகங்களையும் ஒன்று சேர்த்து ஏகோதிட்டத்திற்குப் பின்னர்செய்வது வழக்கம். மாசிதானம் செய்து ஒரு மாசிகத்திற்கு ஒரு பிண்டமாக பதினைந்து பிண்டமிட்டு சந்தனம், பத்திர புஷ்பம் சாத்தி, தூபதீபம் காட்டிப் பூசித்து தர்ப்பணம் செய்ய வேண்டும். மேற்குறிப்பிட்டபடி 15 மாசிகங்களையும் ஒன்றாகச் செய்தாலும் அந்த மாசிகங்களை மாதாந்தம் அந்தந்த திதியில் செய்வது முறையாகும். சபிண்டீக்குப் பின் மாதா மாதம் செய்யப்படும் மாசிகங்கட்கு நிமித்தர் பிண்டம் தேவையில்லை. பிதிரர்களுடன் ஒன்றாகவே கொண்டு மூன்று பிண்டம் இடுக.

## சோதகும்பசிராத்தம் – சொர்க்கபாதேயம்

நீர் நிறைந்த பாத்திரத்தை அன்னத்துடன் தானம் செய்யவும். இச்சிரார்த்தத்தால் பசி, தாகம் தீரும்.

## வைதரணி கோதானம்

பசுவை தானமாகக் கொடுக்கவும். இது இரணிய தானமாகவும் செய்யலாம்.

## சபிண்டீகரணம்

சபிண்டீகரணம் செய்வதன் பொருள் ஆன்மாவின் பிரேதத்தன்மை நீங்கி பிதிர்த்துவ தன்மை அடைதலாகும். அதன் மூலம் இறந்த உயிர் தன் பிரேதத்துவ தோஷம் முற்றாக நீங்கி பிதிர்தத்துவத்தை அடையினும் அடையும். அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவத்துவமடையினும் அடையும். தனக்குத்தகுதியுண்டேல் சிவத்துவத்தை அடையும். இக்கிரியையில் தேவர் பொருட்டு நந்தி, மாகாளர் என இருவரும்பிதிரர் பொருட்டு கந்தர், சண்டர், கணாதீசர் என மூவரும் அதிதி, அப்பியாசுதர் என இருவரும் நிமித்தர் ஒருவரும் (இறந்தவர் பொருட்டு நியமிக்கப்படுபவர்) ஆகிய எண்மர் சபிண்டீயில் அமர்த்தப்படுபவர். தேவர் இருவரும் மேற்குப் பக்கத்தில் வடக்கு முகமாகவும், பிதிரர் மூவரும் தெற்குப்பக்கத்தில் வடக்கு முகமாகவும், நிமித்தர் கிழக்குப் பக்கத்தில் மேற்கு முகமாகவும் மற்றைய இருவரும் நிமித்தருக்கு வடக்கே மேற்கு முகமாகவும் அமர்த்தப்படுவர். இவர்களுக்கு ஆசனம் கொடுத்து உபசாரங்கள் செய்து பூசைகள் முடித்து தானங்கள் கொடுத்து பின்னர் சபிண்டீகரணம் நடைபெறும். குறிப்பிட்ட உபசாரங்கள் பூசைகள் தேவர்கள்பொருட்டு இருத்தப்பட்ட குருமாருக்குச் செய்யும் பொழுது கர்த்தா பூணூலை வலது பக்கமாக அணிய வேண்டும். பிதிரர்களுக்கு பூசை செய்யுமிடத்து இடது பக்கமாக பூணூல் அணிய வேண்டும். சபிண்டீயில் பிண்டதானம் ஒரு முக்கிய அம்சமாகும். வாழையிலையை தெற்கு நுனியாகப் போட்டு, தெற்கு நுனியாக இரு தர்ப்பைகள் வைத்து மேற்குப் பக்க தர்ப்பையில் இறந்தவர் தந்தையாகில் பிதா, பாட்டன், பீட்டன், ஆகியோருக்கும், கிழக்குப் பக்கத் தர்ப்பையில் இறந்தவருக்காக (நிமித்தர்) பெரிய அளவு பிண்டம் இடவேண்டும். இறந்தவர் தாயாராகில் இதே போன்று தாய், பாட்டி, பீட்டி ஆகியோருக்கு பிண்டம் இடவேண்டும். பிண்டம் வடக்கிலிருந்து தொடங்கி வரிசையாக தெற்கு நோக்கி இடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். தெற்கு நோக்கி இருந்து இடது முழங்காலை ஊன்றியிருந்து பிண்டம் நோக்கி தர்ப்பணம் இட வேண்டும். பின்னர் பிண்டத்திற்கு மஞ்சள், சந்தனம், பத்திரபுஷ்பம் முதலியன சாத்தி தூபதீபம் காட்டி பூசிக்க வேண்டும். நைவேத்தியங்கள் வைத்து பூசைவழிபாடு செய்து திருமுறை ஓதி, சமரகவிபாடி, தர்ப்பணம் செய்து கர்த்தாவும் உறவினர்களும் வணங்கி முடிவில் நிமித்த பிண்டத்தில் சாத்தப்பட்ட பத்திர புஸ்பங்களை எடுத்து பிதிரார் பிண்டத்தோடு சேர்த்தல் மூலம் இறந்த நிமித்தர் பிதிரர்களோடு ஒன்றானார். என்று கருதப்படுகிறது. நிமித்த பிண்டத்தை மூன்று பகுதியாக பாகம் செய்து பிதிரர் பிண்டங்களுடன் தனித்தனி சேர்க்கும் முறையும் உண்டு. சபிண்டீயில் தகப்பன் அல்லது தாய் பிள்ளைகளுக்குச் செய்தலும், தமையன் தம்பிக்குச் செய்தலும், தாய்மாமன் மருமகளுக்குச் செய்தலுமாகிய மூத்தோர் இளையோருக்கு பிண்டம் இடும்பொழுது நிமித்தர் பிண்டம் மாத்திரம் இடடுக் கிரியைகளை முடிக்குக.

பச்சை அரிசிமா, உழுத்தம்மா, பால், தயிர், நெய், தேன், எள்ளு இவை பிண்டத்திற்குச் சேர்க்கப்படும் பொருள்களாகும்.

இங்கு ஒரு விடயத்தை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். புத்திரன், புத்திரி அல்லாத ஒருவர் கிரியை செய்தால் பிண்டம் போடும் பொழுது இறந்தவருக்கு (பிதிரருக்கு) மட்டும் பிண்டம் போட வேண்டும். இது ஏகோதிட்ட விதானம், பிதா, பாட்டன், பீட்டன் ஆகியோருக்கு பிண்டம் போடக் கூடாது. புத்திரன், புத்திரி பிண்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போடும் பொழுது பாட்டன் பாட்டி உயிருடன் இருந்தால் அவர்கட்குப் பிண்டம் போடக் கூடாது. ஆசாரியருக்கு பாட்டன் பாட்டி உயிருடன் இருக்கும் விடயத்தைத் தெரிவிக்காது விட்டால் தவறுகள் ஏற்படும்.

கிரியைகள் முடித்த பின்னர் குருமாருக்கு தட்சணை கொடுத்து வணங்கி ஆசீர்வாதம் பெற்று அவர்களை வலமாகப்பின்தொடர்ந்து சென்று வழி அனுப்புக. பிண்டத்தைப் பசுவுக்குக்கொடுக்கவும், அல்லது புண்ணிய தீர்த்தத்தில் போடவும்.

## ஆப்தீக சிறாத்தம்

இதை 'ஆட்டைத்திவசம்' எனக் கூறுவர். முதலாவது வருட முடிவில் இறந்த திதியிற் செய்யப்படும் சிராத்தம். இதில் நிமித்தருக்குப் பிண்டம் இல்லை. இதுவே அபரக்கிரியைடகளின் பூர்த்தியாகும்.

## வருட சிறார்த்தம்

வருடா வருடம் இறந்த திதியிற் சிராத்தம் செய்யப்படும் சிராத்தம் என்பது சிரத்தையுடன் செய்யப்படுவது எனப்பொருள்படும். மகன் தந்தைக்குச் சிராத்தம் செய்யும் பொழுது தகப்பன் பேரன், பீட்டன் ஆகிய மூவருக்கும் மூன்று பிண்டங்களை கிழக்குப் பக்கமாக உள்ள தர்ப்பையிலும், வம்சத்திலும் பிதிரர்கள் எல்லோருக்குமாக ஒருபிண்டத்தை மேற்குப் பக்கமாக உள்ள தர்ப்பையிலும் இடல்வேண்டும். மகன் தாயாருக்குச் செய்யும் சிராத்தத்தில் தாய், தகப்பனுடைய தாய், பேரனுடைய தாய் ஆகிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவருக்கும் மூன்று பிண்டங்களும் வம்சபிண்டம் ஒன்றும் இடுதல் வேண்டும்.

பிள்ளையில்லாத கணவனுக்கு அல்லது மனைவிக்கு இருப்பவர் ஒருவர் சிராத்தம் செய்யலாம்.

தாய், தகப்பன் இருவருக்கும் ஒரே தினத்தில் சிராத்தம் வந்தால் இரு சிராத்தங்களையும் செய்யலாம். (ஆசௌச காரணத்தினால் இப்படி வரலாம்)

மறதியில் சிராத்தம் செய்யத் தவறின் வேறு தினத்தில் அச்சிராத்தம் செய்யக் கூடாது. எதிர்வரும் அமாவாசைத்தினத்தில் அச்சிராத்தத்தைச் செய்யலாம்.

சிராத்தம் கர்த்தாவுக்கு இயலுமான காலம் வரை செய்ய வேண்டும்.

சிராத்தம் செய்ய வசதியில்லாதவர்கள் அத்தினத்தில் ஆலயம் சென்று பூசை வழிபாடு செய்யலாம்.

## சிராத்தம் செய்யுமிடம்

தன்வீடு, திருநந்தவனம், மலை, புண்ணியதீர்த்தக்கரை, திருக்கோயில் குருவின்மனை ஆகிய இடங்களில் சிராத்தம் செய்யலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன் உதயம் முதல் ஆறு நாழிகை வரை (6.00 – 8.24) பிராதக் காலம்.அதற்கு மேல் 12நாழிகை வரை (8.24 – 10.48) சங்கலகாலம். அதற்கு மேல் 18நாழிகை வரை (10.48 –1.12) மத்தியான காலம். அதற்கு மெல் 24நாழிகை வரை (1.12 – 3.36) அபரான்ன காலம். அதற்கு மேல் 30நாழிகை வரை (3.36–6.00) சாயாரன காலம். மத்தியான காலத்தில் (10.48 – 1.12) ஏகோதிட்டமும் அபரான்ன காலத்தில் (1.12 – 3.36) பிதிர் சிரார்த்தமும் செய்க.

**சிராத்த தினத்தில் செய்யத்தக்கவைகள்**

திருக்கோயில்களில் அபிஷேகம் பூசை முதலியவை செய்யலாம்.

**சிராத்ததினத்தில் செய்யத்தகாதவைகள்**

நெல்குத்துதல், பிச்சையிடுதல், தயிர் கடைதல், நெய்முதலிய பொருள்களை வாங்குதல்,கொடுத்தல், முதலியன தகாதனவாம்.

**சிராத்தத்திற்குரிய திரவியங்கள்**

எள்ளு, பச்சை அரிசி, கோதுமை, பயறு, உழுந்து, சர்க்கரை, தேன், பசுவின் பால், தயிர். நெய், எண்ணெய், உப்பு, புளி,மிளகு, சீரகம், மஞ்சள், கடுகு, இஞ்சிக் கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம், தேங்காய், இளநீர், புடோலங்காய், பயற்றங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, ஏலம், சுக்கு, கராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி முதலியனவாம். (மிளகாய், பூசிணிக்காய்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தரிக்காய் முதலியன சேர்க்கலாம் எனச்சில நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.)

**ஆகாத திரவியங்கள்**

கடலை, பீர்க்கங்கங்காய், நீற்றுப்பூசினிக்காய், சுரைக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், முருங்கைக்காய், வாழைப்பூ,வெங்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை. எருமை, ஆடு, ஆகியவற்றின் பால், தயிர் முதலியனவாம்.

**சிறாத்தத்துக்கு உபயோகமாகும் பத்திர புட்பங்கள்**

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தம், எள்ளுப்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

**ஆகாத பத்திர புட்பங்கள்**

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பசுப்பூ முதலியனவாம்

**மஹாளயம்**

புரட்டாதி மாசத்து அபரபக்கம் (அமாவாசைக்குமுன் 15நாட்கள்) பிதிரர்களின் திருப்தி வேண்டி இச்சிராத்தம் செய்யப்படும், வருடசிராத்தம் செய்ய இயலாதவர்கள் மஹாளயமாவது செய்ய வேண்டும். மற்றைய சிராத்தங்களிலே ஏற்படும் குறைகளுக்கு இது சாந்தியாக அமையும். தந்தை, தாய் இருவரும் இறந்திருப்பின் இருவருக்குமாக தனித்தனியே பிண்டமிடல் வேண்டும். இது பிதிர்களுக்கு இராப்போசனமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசை நாளில் விரதமிருந்து பிதிர் திருப்திக்காக எள்ளும் தண்ணீரும் இறைத்தல் தந்தை, தாய் வர்க்கம் இரண்டினுக்கும் இது நன்மை பயக்கும், இவை ஆட்டைத் திதியின் பின்செய்ய வேண்டும்.

## தநிஷ்டா பஞ்சமி

அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்தராட்டாதி, ரேவதி ஆகிய ஐந்து நட்சத்திரங்களில் மரணித்தால் பஞ்சமி தோஷமுண்டு. இறந்த வீட்டில் கும்பம், தீபம், ஜலம் இவைகளை வைத்து பசுமாடு கட்டிவைத்து வீட்டில்நெற்பொரி, நவதானியம் தூவுதல் வேண்டும். அவிட்ட நட்சத்திரத்திற்கு ஆறு மாதமும். சதய நட்சத்திரத்திற்கு மூன்று மாதமும், பூரட்டாதி நட்சத்திரத்திற்கு ஒன்றரை மாதமும், உத்தரட்டாதி நட்சத்திற்கு ஒரு மாதமும், ரேவதி நட்சத்திரத்திற்கு அரை மாதமும் தோஷமாம். தோஷம் நீங்க பஞ்சமி சாந்திசெய்ய வேண்டும்.

## துர்மரணம்

துர்மரணம் அல்லது அவமிருத்து மரணம் அடைந்தவருக்கு கிரியை செய்யாது தகனம் செய்யவேண்டும். துர்மரண மடைந்தவருக்கு அங்கமெதிலும் குறைவுபடாமலிருந்தால் ஆறு மாதத்தின் மேல் இறந்த திதியில் அந்தியேட்டி முதலிய கிரியைகள் செய்யலாம். அங்கங்களில் குறைவுபட்டிருந்தால் ஒருவருடத்தின் பின் இறந்த திதியில் கிரியைகள் செய்யலாம். வைரவ சாந்தி செய்து கிரியை செய்யவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீர மரணம்**

வீரமரணமடைந்தவர்கட்கு இயற்கை மரணம் போன்ற கிரியைகள் செய்யலாம்.

**நாந்தி சிராத்தம்**

விவாகம் முதலிய சுபகாரியங்கள் நடைபெறும் தினம் அல்லது அதற்கு முன் தினம் பிதிரர்களுடைய ஆசீர்வாதம் பெறும் பொருட்டு இரணியதானமாக(காசு) இவை செய்யப்படும். பிதிர் வழிபாடு செய்யாது எந்த நற்காரியமும் செய்யக் கூடாது.

**தர்ப்பணம்**

வலது கையில் எள்ளையும் தர்ப்பையையும் வைத்து வலது கைக்கட்டை விரலுக்கும் சுட்டு விரலுக்கும் நடுவாக விழும்படி தர்ப்பணம் செய்ய வேண்டும்.

**பிண்டம் இடுதல்**

பிண்டம் இடும் பொழுது கர்த்தா தெற்கு முகமாக இடது முழங்காலை ஊன்றிக் கொண்டிருந்து வலது கைப் பெருவிரலிடையினால் பிண்டம் இடுதல் வேண்டும்.

**தசதானம்**

இத்தானம் அந்தியேட்டியில் செய்யப்படும் தானமாக வழக்கத்தில் வந்துள்ளது. ஆனால் இத்தானத்தை ஒருவர் உயிருடன் உள்ள பொழுது கொடுப்பது மிகச் சிறந்ததாகும். தசதானம் வருமாறு: பசு, பூமி, எள்ளு, காசு, நெய், வஸ்திரம், நெல்லு, வெல்லம், வெள்ளி, உப்பு இதில் சிலவற்றை இரணியதானமாக கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசௌசம்வரின் செய்யும் விதி

பிறப்பு இறப்பு ஆசௌத்திலே சிராத்தம் வந்தால் அவ் ஆசௌசம் நீங்கும் தினத்தில் சிராத்தம் செய்தல் வேண்டும் சிராத்தம் தொடங்கிய பின்னர் ஆசௌசம் வந்தால், அச்சிராத்தம் முடியும் வரை அது கர்த்தாவைப் பற்றாது.

### சைவருக்கு உரிய ஆசௌசம்

சிவதீட்சையுடையவருக்கு சைவர் என்ற பெயர் உண்டு. சிவதீட்சையுடைய பிராமணரல்லாத ஏனைய மூன்று வருணத்தார் விபூதி, உருத்திராக்கம் அணிந்து சிவபூசையுடன் புலால் முதலியவை உண்ணாதவராயும் இருப்பின் அவர்களுக்கு ஆசௌசம் பதினைந்து நாள்களாகும்.

### அபரக்கிரியை பற்றிய பொது விடயங்கள்

புண்ணிய தீர்த்தமாடும் காலத்தில் பிண்ட தானம், தர்ப்பணம் செய்தால் பிதிர்களின்ஆசி கிடைக்கும்.

தானங்களுக்கு பச்சை அரிசி கொடுப்பது நன்று. (பிராமணர்கள் புழுங்கல் அரிசி சாப்பாட்டுக்குப் பயன்படுத்தக்கூடாது என்ற வழமையும் உண்டு.)

புரோகிதர் அல்லது ஆசாரியர் ஒரு நாளைக்கு ஒரு தானம் தான் பெறவேண்டும். இவர்கள் ஒரு நாளைக்கு ஒரு சிராத்தம் தான் செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபரக் கிரியைகள் செய்யும் பொழுது ஆசிரியர் கர்த்தா ஆகிய இருவரும் இடப்பக்கமாக பூணூல் அணிய வேண்டும். பவித்திரம் அணிந்திருக்க வேண்டும். தூபதீபம் இடப்புறமாக (அப்பிரதட்சணம்) காட்டுதல் வேண்டும். கர்த்தா கௌபினம் தரித்து இரண்டு வஸ்திரம் தரித்திருக்க வேண்டும். தென்புலத்தாருக்கு செய்யும் கிரியை யாவும் தெற்கும் மேற்கும் நோக்கியபடி செய்ய வேண்டும்.

மரணக்கிரியையில் ஆசாரியரோ அல்லது கர்த்தாவோ உருத்திராட்ச மாலை அணியக் கூடாது.

முத்தித்தலம் ஏழினில் முதலாவது ஆகிய காசித்தலம் சென்று அங்கு அபரககிரியைகளை அதாவது அந்தியேட்டி முதலியவற்றை உயிருடன் இருக்கும் பொழுது செய்தால் பின்னர் தங்களுக்கு மரணத்தில் கிரியை எதுவும் செய்யத் தேவையில்லை என்று சொல்வதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். காசியாத்திரை சென்ற வந்தவர்கள் சிலர் தங்கட்கு மரணத்தின் பின் கிரியை ஏதும் செய்ய வேண்டாமென்று முன்னமே கூறியதினால் அவர்களுக்கு உறவினர்கள் கிரியைகள் செய்யாது விட்ட சில சம்பவங்களையும் நாம் கேள்விப்பட்டுள்ளோம். இவை முற்றிலும் பிழையான கருத்தாகும். அப்படி ஒரு முறை நாம் எந்த நூலிலும் இருப்பதாக அறியவில்லை. ஆனால் புண்ணிய நதிகளில் தீர்த்தமாடி பிண்டதானம் தர்ப்பணம் செய்தால் பிதிரர்களுக்கு திருப்தி உண்டாகும் என்று நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட இந்திய முத்தித்தலங்களில் ஒன்றாகிய கயாவில் பிதிர்களுக்குப் பிண்டம் போடுவது வழக்கம். அங்கு மூன்று இடங்களில் பிண்டம் போடுவார்கள். அங்குள்ள புரோகிதர்கள் (பண்டாக்கள்)இனி மேல் நீங்கள் உங்கள் பெற்றோருக்குப்பிண்டம் போடத் தேவையில்லை என்று கூறுவது உண்டு. ஆனால் இதுவும் நூலாதாரம் அற்றதே.


தாய், தகப்பன் இறந்த ஒருவருடத்திற்குள் தலயாத்திரை செய்தல் கூடாது. சுபகாரியங்களும்செய்தல் கூடாது.

இக்கட்டுரை, அபரக்கிரியாவிதி, சோமசம்பு பத்ததி, சைவபூஷணம் ஆகிய நூல்களிலிருந்தும், சைவக்கிரியைகள் பற்றி வெளிவந்த பிறநூல்களிலிருந்து தொகுத்து எழுதப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதயம் நிறைந்த நன்றிகள்

அன்பின் உறைவிடமாய்
பண்பின் பிறப்பிடமாய்
நீதிநெறி வழுவாது
தர்மநெறி நின்று
எம்மை வழி நடாத்தி
சிவன் கழல் சேர்ந்த
எம் அன்புத் தெய்வம்
**அமரர் கார்த்திகேசு சோமசுந்தரம்** அவர்களின்
மறைவின்போது எங்களுக்கு அனுதாபம் தெரிவித்து
ஆறுதல் கூறிய உறவுகள், கல்விசார் சமுகத்தினர், நண்பர்கள்,
வைத்தியசாலையில் இருந்தபோது சிகிச்சையளித்த டாக்டர்கள்,
தாதிகள், அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர்,
மலர்வளையம் வைத்தோர், அனைவருக்கும் அந்தியேட்டி,
சபிண்டீகரணக் கிரியைகளை திறம்பட செய்து உதவிய
சைவக்குருக்கள் அந்தணக் குருக்கள் ஆகியோருக்கும் எமது
மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவ்வண்ணம்**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

"எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்.
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்.
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை
மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்".
இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-





தேவி Printers Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org